Government of Karnataka

# செம்மொழித் தமிழ்

# *CHEMMOZHI THAMIZH*

## முதல் மொழி

**FIRST LANGUAGE TAMIL**

# 8

பாகம் - 1

**ஆம் வகுப்பு**

**STANDARD**

@KTBS
NOT TO BE REPUBLISHED

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi prepared which in turn are designed based on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 11 languages, seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS and 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

**NCF- 2005 has a number special features and they are:**

- Connecting knowledge to life activities.
- Learning to shift from rote methods.
- Enriching the curriculum beyond textbooks.
- Learning experiences for the construction of knowledge.
- Making examinations flexible and integrating them with classroom experiences.
- Caring concerns within the democratic policy of the country.
- Make education relevant to the present and future needs.
- Softening the subject boundaries integrated knowledge and the joy of learning.
- The child is the constructor of knowledge.

The New books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach.

The Learner is encouraged to think, engage in activities, masters skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the total development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society

©KTBS NOT TO BE REPUBLISHED

and a productive citizen of this great country India.

Language textbooks are designed to help learners master communicative competencies, excellent comprehension, meaningful expression and efficient reference skills.

English is studied by most students as the second language. Teachers have to keep in mind the three fundamental approaches based on which the readers have been designed and adapt their teaching methods and help learners master language skills and competencies and help them become excellent users of English.

Schools in Karnataka offer seven languages a media of instruction and eight as first languages and ten languages are offered as third language. The objective is to help the learners to use these languages efficiently at the communicative level. It is hoped that at least a cross section of learners achieve competencies to use these languages at the creative level.

Teachers are expected to adapt their teaching methods not to make these textbooks just feed materials for examinations, but help learners master language competencies such as communication, comprehension, expression in writing and necessary reference skills. There is going to be a source book for teachers in Kannada 1st language, English 2nd Language and Hindi 3rd Language. Please make use of these source books and make teaching very effective.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board in helping the Text Book Society in producing these textbooks.

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka.

**Prof. G S Mudambadithaya**
Coordinator
Karnataka Textbook Society®
Bengaluru, Karnatka

©KTBS
NOT TO BE REPUBLISHED

# பாட நூல் அறிமுகம்

அகருநாடக மாநிலத்தில் பிறமொழிச் சூழலில் வாழும் தமிழ் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழிலக்கிய நுகர்வாற் றலைப் பெறுவதற்குகந்த நிலையில் இப்பாட நூல் திட்டமிடப் பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரையுள்ள இலக்கியங்களைப் பற்றிய உணர்விணை மாணவர்களிடையே வளர்க்க வேண்டுமென்னும் உயரிய நோக்குடன் செய்யுள் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்புறவி யல், அறிவியல், சுற்றுப்புறச் சூழல், பயண இலக்கிய அறிவு நகைச்சுவையோடு இழைந்திலங்கும் அறிவு, சிறுகதை, நாடகம் போன்றவற்றைப் பற்றி மாணவர்கள் அறிய வேண்டுமென்ற நிலையில் அவற்றில் ஈடுபாடு ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை ஆகியவற்றைத் தெளிவுறுத்தும் நிலையிலும் வாழும் மண்ணில் புகழ்பெற்றிலங்கும் கன்னடக் கண்மணிகளின் சிறப் பினையும் மாணவர்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியம் என்பதனையும் அறிவுறுத்தும் வகையிலும் உரைநடைப் பகுதி அமைந்துள்ளது. செய்யுள், உரைநடைப்பகுதிகளில்

மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கும் வகையில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பாட நூலை உருவாக்கும் நற்பேற்றினை எங்களுக்கு அளித்தமைக்காக கருநாடக மாநிலப்பாடப் புத்தகக் கழகத்திற்கும் அதன் நிருவாக இயக்குநருக்கும் நூல் செம்மையுற அமையத்

© KTBS NOT TO BE REPUBLISHED

துணை நின்ற உதவி இயக்குநர் திருமதி. மகாலிங்கம்மா, சந்திரகலா அவர்கட்கும் கருநாடக மாநிலக் கல்வித் துறை (பாட நூல்) இணை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் பிற அலுவலர்கட்கும் பாடநூல் குழுவினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். செய்யுள் மற்றும் உரை நடைப் பகுதிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் முதலியவற்றைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிநல்கிய தமிழ் எழுத்தாளப் பெருமக்களுக்கும் இலக்கிய ஆர்வலர்கட்கும் அன்பார்ந்த நன்றியைக் கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

**முனைவர் இரா. சீனிவாசன்**
தலைவர், பாடநூற்குழு
மற்றும் குழு உறுப்பினர்கள்

@KTBS
NOT TO BE REPUBLISHED

# TEXT BOOK COMMITTEE

***Chairperson:***

**DR.R. Srinivasan,** Professor in Tamil & Retired Prinicipal, # 3668, 8th Cross, 13th D Main, HAL II Stage, Indira Nagar, Bengaluru.

***Members:***

**Smt./Sri**

| | |
|---|---|
| **1. N. Krishnamurthy, Lecturer,** | R.B.A.N. M.S Degree College, Bengaluru. |
| **2. G. Subramanian,** | Principal, Corporation Junior College, Austin Town, Bengaluru. |
| **3. Dr. R. Saraswathi,** | Lecturer, L.B.S, Govt. Degree College, R.T.Nagar, Bengaluru-38. |
| **4. Govindaraju,** | Lecturer, Hasanath Pre-University College, Bengaluru. |
| **5. M. Karthiyayini,** | Tamil Pandit, St.Alphosius High School, St. Thomas Town, Bengaluru. |

***Scrutinizer:***

| | |
|---|---|
| **Dr. T.S. Malliga,** | Professor. & H.O.D in Tamil, Maharani's Science College for Women, Bengaluru - 1. |

***Chief Co-ordinator :***

| | |
|---|---|
| **Prof . G.S. Mudambadithaya,** | Co-ordinator, Curriculum revision and text book preparation, KTBS, Bengaluru. |

***Chief Advisers :***

| | |
|---|---|
| **Sri Nagendra Kumar,** | Managing Director, KTBS, Bengaluru. |
| **Sri Panduranga,** | Deputy Director (incharge), KTBS, Bengaluru. |

***Programme Co-ordinator :***

| | |
|---|---|
| **Smt. Asharani N.,** | ADPI, KTBS, Bengaluru. |

@KTBS NOT TO BE REPUBLISHED

# ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರೀಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17 ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನುಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

© KTBS NOT TO BE REPUBLISHED

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

ಎಂ. ¦. ªiÁzÃUËq
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
ಬೆಂಗಳೂರು–85

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ
ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು–85

© KTBS NOT TO BE REPUBLISHED

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

**ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು**

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ. ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

## ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

**ಅಧ್ಯಕ್ಷರು**

ಡಾ. ಸುಧಾಕರ, ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

**ಸದಸ್ಯರು**

ಶ್ರೀ. ಆಶೀರ್ವಾದಂ, ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ. ಬಾಬು, SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಅಮುದ, ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ, ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

ಡಾ. ಕಾರ್ಲಾಸ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಪ್ರೊ. ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

**ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:**

²Ã ಎಂ. ¦. ªiÁzÃUËq, ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ ªÄw JA. r. GµÁ, ಉಪನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :**

**ಶ್ರೀ ಶಂಕರೆ ಗೌಡ,** ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

©KTBS NOT TO BE REPUBLISHED

# பொருளடக்கம்

## அ. செய்யுள்


I **வாழ்த்து**

1. இறை வாழ்த்து 1
2. மொழி வாழ்த்து 3

II **அறவுரை**

1. திருக்குறள் 5
2. நான்மணிக்கடிகை 10

III **தொடர்நிலைச் செய்யுள்**

1. சிலப்பதிகாரம் 13

IV **பல்சுவை**

1. இரட்டுற மொழிதல் 21
2. திருக்குற்றாலக் குறவஞ்சி 23
3. கலிங்கத்துப் பரணி 25

V **மறுமலர்ச்சிக் கவிதைகள்**

1. உலகமயமானவன் 27
2. சர்வக்ஞர் வெண்பா 31


@KTBS NOT TO BE REPUBLISHED

# ஆ. உரைநடை

1. அழகின் சிரிப்பில் உவமை அழகு 34
- முனைவர் ப. கோபாலன்

2. நீரெனும் அமிழ்து 42
- கவிச்சுடர் முருகையா

3. வல்லவனுக்கு வல்லவன் 48
- எஸ். மெய்யப்பன், எம். ஏ

4. அயல் மண்ணின் அற்புதங்கள் 54
- முனைவர் அ. சங்கரி

5. நாட்டுப்புற இயல் & ஓர் அறிமுகம் 60
- முனைவர் சு. சண்முகசுந்தரம்

# இ. இலக்கணம்

1. எழுத்து 128

2. சொல் 131

3. திணை 132

4. பால் 133

5. எண் 133

@KTBS NOT TO BE REPUBLISHED

## மனப்பாடப் பகுதி

| | | | |
|---|---|---|---|
| 1. | இறை வாழ்த்து | 4 | அடிகள் |
| 2. | மொழி வாழ்த்து | 4 | அடிகள் |
| 4. | திருக்குறள் | 20 | அடிகள் |
| 6. | இனியவை நாற்பது (முதல் பாடல்) | 4 | அடிகள் |
| 8. | சிலப்பதிகாரம் (25-31 அடிகள்) | 7 | அடிகள் |
| 10. | இரட்டுற மொழிதல் | 4 | அடிகள் |
| 11. | திருக்குற்றாலக் குறவஞ்சி | 4 | அடிகள் |

©KTBS NOT TO BE REPUBLISHED

# அ. செய்யுள்

## வாழ்த்து

## 1. இறை வாழ்த்து

## திருவருட்பா

T3S7F9

விண்ணுறு சுடரே போற்றிநின்னுள் விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே என்னைக் கலந்த நல்களிப்பே போற்றி
பண்ணுறு பயனே என்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறும் தங்கட்கு இனிய தெள்ளமுதே போற்றி! போற்றி!

- இராமலிங்க அடிகள்

**நூல் குறிப்பு:**

திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவனின் திருவருளைப் பெறுவதற்காகப் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். போற்றித் திருவிருத்தம் என்னும் பகுதியில் உள்ள ஒரு பாடலே இங்கு இறை வாழ்த்தாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் அளவொத்து அடிதோறும் ஆறு சீர்களைப் பெற்று வருதலின் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

திருவருட்பிரகாச வள்ளலார் என அழைக்கப்படுகின்ற இராமலிங்க அடிகள், சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் இராமையாப்பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் பிறந்தவராவார். கி.பி. 1823 முதல் 1874 வரை வாழ்ந்த இவர் மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருணிய ஒழுக்கம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய தலைசிறந்த கொள்கைகளாகச் சமரச சன்மார்க்கமும் ஜீவகாருணியமும் அமைந்துள்ளன. இவர் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை ஆகியவற்றையும் நிறுவியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள் :**

**சுடர் - ஒளி, போற்றி - வணங்குகிறேன், மணி - கண் பாவை ; மணி - மாணிக்கம், களிப்பு - மகிழ்ச்சி**

**கருத்துரை:** வானத்தில் பொருந்திய ஒளியே! என்னுள்ளத்துள் ஒளி வீசும் விளக்கே! என் கண்ணுள் கருமணியானவனே! என்னுடன்

@KTBS NOT TO BE REPUBLISHED

இரண்டறக் கலந்த நல்ல மகிழ்ச்சியே! பண்ணில் பொருந்திய இசையின் பயனானவனே! என்னிடத்தில் பணிவினைத் தோற்றுவித்த மாணிக்கமே! உன்னையே உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருக்கின்ற உன் அடியவர்களுக்கு இனிமையான தெளிந்த அமுதமானவனே! உன்னைப்புகழ்ந்து வணங்குகின்றேன்.

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை எழுதுக:-**

1. உள்ளத்தில் இறைவன் எவ்வாறு விளங்குகிறான்?
2. இறைவன் யாரைப் பணிவிக்கின்றார்?
3. அடியவர்களுக்கு இறைவன் எத்தகைய அமுதமாக விளங்குகிறான்?

**ஆ) ஐந்து அல்லது ஆறுதொடர்களில் விடை எழுதுக:-**

இராமலிங்க அடிகளார் இறைஞ்சும் இறைவனின் சிறப்புகளைக் கூறுக.

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-**

1. கண்ணுறு மணியே என்னைக் கலந்த நல்களிப்பே போற்றி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. என்னுள் விளங்கிய ____________ போற்றி

2. என்னைப் பணிவித்த _____________ போற்றி

**III அ) பிரித்து எழுதுக:-**

விண்ணுறு: கண்ணுறு: தெள்ளமுது

**ஆ) சேர்த்து எழுதுக:-**

நல் + களிப்பு

**இ) எதிர்ச் சொல் தருக:-**

பணிவு

NOT TO BE REPUBLISHED @KTBS

# 2. மொழி வாழ்த்து

## தமிழன்னை

X4I7W2

தேன் வேண்டேன் தித்திக்கும் செங்கரும்பின்
சுவை வேண்டேன் தெவிட்டா ஆன்பால்

தான் வேண்டேன் நறுங்கனியும் சர்க்கரையும்
கற்கண்டும் தனித்தேம் பாகும்

நான் வேண்டேன் அறுசுவையும் கலந்தவொரு
தனிச்சுவையும் நயக்க மாட்டேன்

ஏன் வேண்டேன் இவையெல்லாம் தனையொவ்வா
இனியதமிழ் இருக்கை யாலே.

- புலவர். குழந்தை

**நூல் குறிப்பு :** இப்பாடல் புலவர் குழந்தை பாடல்கள் என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:** புலவர் குழந்தை 'இராவணகாவியம்' என்னும் ஒப்பில்லாத தனித் தமிழ்ப் பெருங்காவியத்தை இயற்றித் தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியினையும் கிளர்ந்தெழச் செய்தவர். இவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 'ஒலவலசு' என்னும் சிற்றூரில் முத்துசாமிக் கவுண்டருக்கும் சின்னம்மையாருக்கும் ஒரே மைந்தராவார்.

1934 - இல் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் பட்டம் பெற்றார். பவானி கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். கண்ணியம்மன் சிந்து, நல்லதம்பிச் சர்க்கரை தாலாட்டு, வீரகுமார சாமி காவடிச் சிந்து, இராவண காவியம், அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி, முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

**கருத்துரை :** எனக்குத் தேன் தந்தாலும் வேண்டேன். தித்திக்கும் சுவையான செங் கரும்பைக் கொடுத்தாலும் வேண்டேன். இன்சுவை குறையாத பசும்பால் கொடுத்தாலும் வேண்டேன். சுவை மிகுந்த கனியும் சர்க்கரையும் கற்கண்டும்

© KTBS NOT TO BE REPUBLISHED

தனித் தேம்பாகும் கலந்து தந்தாலும் நான் விரும்ப மாட்டேன். அறுசுவையும் கலந்தவொரு தனிச் சுவையும் விரும்பமாட்டேன். ஏனெனில் ஒப்புமை இல்லாத தமிழ் இருப்பதால் அவற்றை நான் விரும்பவில்லை என்கிறார்.

## பயிற்சி

**I. அ) ஓரிரு தொடர்களில் விடைஎழுதுக:-**

1. செங்கரும்பின் சுவை எவ்வாறு உள்ளது?
2. ஆவின் பால் எத்தகையது?
3. எத்தகைய கலவைச் சுவையை நயக்கமாட்டேன் என்கிறார் கவிஞர்?

**ஆ) ஐந்து அல்லது ஆறுதொடர்களில் விடைஎழுதுக:-**

1. இனிய தமிழ்ச் சுவை பிறசுவைகளை விடச்சிறந்தது என்பதைக் குறித்து எழுதுக

**II. அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக:-**

. . . . . . . . . . . . . . . . . . நறுங்கனியும் சர்க்கரையும் கற்கண்டும் தனித்தேம் பாகும் நான் வேண்டேன்.

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

ஏன் வேண்டேன் இவையெல்லாம் தனையொவ்வா ____________ இருக்கை யாலே.

**III. அ) பிரித்து எழுதுக:-**

செங்கரும்பு; கற்கண்டு; இவையெல்லாம்; தனையொவ்வா.

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக:-**

தித்திக்கும், தனிச்சுவை

@TBS NOT TO BE REPUBLISHED

## II அறவுரை

மனிதன் தன் வாழ்க்கையில் உயர நல்லறங்களையும் நீதி நூல்களையும் படித்து, அவை கூறும் கருத்துக்களைக் கடை பிடிக்கவேண்டும். அவ்வாறான கருத்துக்களைக் கூறும் நூல்கள் அறநூல்கள் எனப்படும். அவற்றில் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பவை திருக்குறள், நாலடியார், திரிகடுகம், நான்மணிக் கடிகை போன்றவை ஆகும்.

C3X5G1

## 1. திருக்குறள்

### 1. செய்ந்நன்றியறிதல்

1. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

2. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

### 2. அடக்கமுடைமை

3. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

4. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

### 3. அறிவுடைமை

5. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

6. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

### 4. சொல் வன்மை

7. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

8. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

### 5. நட்பு

9. நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

10. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

- திருவள்ளுவர்

**<u>நூற்குறிப்பு:</u>** உலகப் பொதுமறை எனப் போற்றப்படும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பகுதிகளையும் 133 அதிகாரங்களையும் 1330 குறள் வெண்பாக்களையும் கொண்டது. இதனை முப்பால் எனவும் போற்றுவர். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத்தறித்த குறள்"

என்ற ஔவையார் வாய் மொழியும்,

" ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"

என்ற பழமொழியும் திருக்குறளின் பெருமைகளை விளக்குகின்றன.

**<u>ஆசிரியர் குறிப்பு:</u>** திருக்குறளை எழுதியவர் தெய்வப்புலவர் என்று சிறப்பிக்கப்படுகின்ற திருவள்ளுவர் ஆவர். உலக மக்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டியவர். இவருக்குத் தெய்வப்

© KTBS NOT TO BE REPUBLISHED

புலவர், பொய்யில் புலவர், மாதானுபங்கி, முதற் பாவலர், செந்நாப் போதார் முதலான வேறுபெயர்களும் உண்டு. இவரது காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டு என்பர்.

**அருஞ்சொற் பொருள்:** ஞாலம் - உலகம் ; மாணப் பெரிது - மிகப்பெரிது; அமரர் - தேவர்; ஆரிருள் - மிக்க இருள்; வடு - தழும்பு; மெய்ப்பொருள் - உண்மைப்பொருள்; சொலல் வல்லன் - சொல்லுவதில் வல்லவன்; இகல் - பகைவர்; நவில் தொறும் - படிக்கும் போதெல்லாம் ; நூல் நயம் - நூலின் சிறந்த கருத்து இன்பம் கொடுத்தல்; பயில்தொறும்- பழகப் பழக; உடுக்கை - ஆடை; இடுக்கண் - துன்பம்.

## கருத்துரை

## செய்ந்நன்றியறிதல்

1. உரிய காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது ஆராய்ந்து பார்த்தால், உலகைவிட மிகப் பெரியதாக இருக்கும்.

2. ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லது அல்ல: அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது மிகவும் நல்லது.

### அடக்கமுடைமை

3. அடக்கம் ஒருவனைத் தேவருலகில் சேர்க்கும்; அடக்கம் இல்லாமை ஒருவனைப் பாவங்கள் நிறைந்த தீய உலகில் சேர்த்து விடும்.

4. தீயினால் சுட்ட புண் தழும்பாய் உடலின் மேல் இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் தீய சொற்களால் ஏற்படும் வடு மனத்துள் என்றும் ஆறாது.

@KTBS NOT TO BE REPUBLISHED

## அறிவுடைமை

5. ஒரு பொருள் பற்றி யார்யார்வழி கேட்டாலும் அப் பொருளின் உண்மைப்பொருளைக் காண்பதே அறிவாகும்.

6. அறிவுடையோர் எல்லாச் செல்வங்களையும் பெற்றவர் ஆவர். அறிவற்றவர் எதைப் பெற்றவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

## சொல் வன்மை

7. தான் பேசும் சொல்லை வெல்லக் கூடிய வேறு சொல் இல்லாமை அறிந்த பின்பே அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

8. எண்ணியதைத் திறமையாகச் சொல்பவனாகவும் சோர்வில்லாதவனாகவும் அவைக்கு அஞ்சாதவனாகவும் உள்ளவனைப் பேச்சில் யாராலும் வெல்ல முடியாது.

## நட்பு

9. படிக்கப் படிக்க நூலின் பொருள் இன்பம் தருவதைப் போன்று, நற்பண்பாளருடன் பழகப்பழக அவரின்நட்பு இன்பம் தரும்.

10. ஆடை நெகிழ்ந்த போது ஒருவனின் கைகள் தாமாகவே அவ்வாடை நெகிழாமல் காப்பது போல, நண்பனுக்குத் துன்பம் வந்தபோது அவன் கேட்காமலேயே உதவி அத்துன்பத்தைப் போக்குவதே நல்ல நட்பாகும்.

## பயிற்சி

I. அ) ஓரிரு தொடரில் விடை எழுதுக:-

1. ஞாலத்தின் மாணப் பெரிது எது ?
2. நன்று எது ? நன்றல்லது எது?
3. அமரருள் உய்ப்பது எது?
4. தீயினால் சுட்ட புண் என்ன ஆகும்?
5. எது அறிவு?
6. எல்லாம் உடையவர் யார்?

© KTBS NOT TO BE REPUBLISHED

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:**

1. செய்ந்நன்றி அறிதல் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
2. அடக்கமுடைமையின் சிறப்பையும் அதன் தன்மையையும் விளக்குக?
3. அறிவுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?
4. சொல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்? அவ்வாறு இருப்பதன் பயன் யாது?
5. நட்பு பற்றி வள்ளுவர்கூறும் கருத்து யாது?

**II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-**

1. 'ஞாலத்தின் மாணப் பெரிது'
2. 'தீயினால் சுட்ட புண் உள்ளாறும்'
3. சொலல் வல்லன், சோர்விலன் அஞ்சான்

**III. அ) பிரித்து எழுதுக:-**

நன்றன்று, உள்ளாறும், மெய்ப்பொருள், அறிவுடையார், அறிவிலார், சோர்விலன்

**ஆ) சேர்த்து எழுதுக:-**

அறம் + உரை சிறிது + எனினும்

**இ) கீழ்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

நன்றி, அடக்கம், மெய்ப்பொருள், இடுக்கண்.

NOT TO BE REPUBLISHED @KTBS

## 2. நான்மணிக் கடிகை

E6Q8B4

1. மொய் சிதைக்கும் ஒற்றுமை இன்மை, ஒருவனைப்
பொய் சிதைக்கும் பொன்போலும் மேனியை; பெய்த
கலம் சிதைக்கும் பாலின்சுவையை; குலம் சிதைக்கும்
கூட்டார் கண்கூடி விடின்.

2. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளம் இலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞர் இல் போழ்தில் சினம்குற்றம்; குற்றம்
தமர்அல்லார் கையகத்து ஊண்.

**நூற்குறிப்பு:** நான்மணிக் கடிகை என்பது நான்கு வகையான மணிகளால் கோக்கப்பட்ட அணிகலனைப் போல் பாடல் தோறும் நான்கு நீதிகளைக் கொண்ட 104 வெண்பாக்களால் ஆன நூலாகும். இது கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் ஒன்றாகும்.

**ஆசிரியர்குறிப்பு:** இதனை இயற்றியவர் விளம்பிநாகனார் என்பவராவர். நாகனார் என்பது இயற்பெயரையும், விளம்பி என்பது இவரது ஊர்ப் பெயரையும் குறிப்பதாகக் கொள்ளலாம். கடவுள் வாழ்த்தில் திருமாலைப் போற்றிப் புகழ்வதால் இவர் வைணவராக இருக்கலாம் என்பர்.

**அருஞ்சொற் பொருள்:** மொய் - வலிமை; கலம் - பாத்திரம்; சிதைக்கும்- கெடுக்கும்; மேனி-உடல்; கூடார் - சேரத் தகாதவர்; வளம் - செல்வம்; வள்ளல் - கொடை கொடுப்பவர்; கிளைஞர்- உறவினர்; சினம் - கோபம்

### கருத்துரை

1. மனிதர்களிடையே ஒற்றுமை இல்லையென்றால், அவர்களிடையே உள்ள வலிமை கெட்டுவிடும்; பொன் பொருளை உடைய உயர்ந்த அழகிய உடல் உடையவனாக இருந்தாலும் பொய் சொல்வதால் அவன் சிறப்பு கெட்டுவிடும்;

NOT TO BE REPUBLISHED ©KTBS

தூய்மையற்ற பாத்திரத்தில் பாலை ஊற்றினால் பாலின் சுவை கெட்டு விடும்; தீய குணம் உடையவர்களோடு ஒருவன் சேர்ந்துவிட்டால் அவனது உயர்ந்த குலத்தின் சிறப்பு கெட்டுவிடும்.

2. மனிதனாகப் பிறந்தவர்கள் இளமைக் காலத்தில், அவனுக்குப் பிற்காலத்துக்குத் தேவையான கல்வியைக் கல்லாமல் இருப்பது குற்றமாகும்; தம்மிடம் பொருள் மிகுதியாக இல்லாத போது, பிறருக்கு மிகுதியான பொருளை வாரி வாரி வழங்குதல் குற்றமாகும், தம்முடைய கூட்டத்தார் இல்லாத போது அடுத்தவரிடம் கோபம் கொள்ளுதல் குற்றமாகும். தமக்கு எவ்விதத்திலும் உறவு அற்றவரிடம் உணவு வாங்கி உண்ணுதல் குற்றமாகும்.

## பயிற்சி

I. அ) ஓரிரு தொடரில் விடை தருக:-

1. ஒற்றுமை இன்மையால் கெடுவது எது?
2. பொய் பேசுவதால் கெடுவது எது?
3. பாலின் சுவையைக் கெடுப்பது எது?
4. தன் குலமே தன்னை எப்போது அழிக்கும்?
5. வள்ளல் தன்மை எப்போது பிழையாக முடியும்?
6. எப்பொழுது கொள்ளும் சினம் குற்றமாகும்?

ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-

1. எவைஎவை எவ்வெவற்றைச் சிதைக்கும் என்று விளம்பி நாகனார் விளக்கிக் கூறுகின்றார்?
2. குற்றமாவனவாக நான்மணிக் கடிகை கூறுவன யாவை?
3. நான்மணிக்கடிகை - நூல் குறிப்பு வரைக.

NOT TO BE REPUBLISHED @KTBS

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. பாலின் சுவையை ____________ சிதைக்கும்

2. கூடார்கள் கூடின் ____________ சிதைக்கும்

3. இளமைப் பருவத்தில் __________ குற்றம்

**III. அ) தொடரில் அமைத்து எழுதுக:-**

ஒற்றுமை இன்மை; மேனி; இளமைப் பருவம்;
வள்ளல் தன்மை; குற்றம்; ஊண்.

**ஆ) பிரித்து எழுதுக:-**

பொய் சிதைக்கும்; வள்ளன்மை

@KTBS NOT TO BE REPUBLISHED

## III. தொடர்நிலைச் செய்யுள்

## 1. சிலப்பதிகாரம்

### வழக்குரை காதை

### கண்ணகி வாயிலோனுக்கு அறிவித்தல்

வாயி லோயே வாயி லோயே!
அறிவறை போகிய பொறி அறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாள் என்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே! என

### வாயில் காப்போன் மன்னனிடம் தெரிவித்தல்

வாயிலோன், வாழி எம் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!
செழிய வாழி ! தென்னவ வாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணி
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை யல்லள்!
அறுவர்க்கு இளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள் !
செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொற்றொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாளே!

@KTBS NOT TO BE REPUBLISHED

**அரசன் அவனை வரச்சொல்லல்**

வருக மற்றவள் தருக ஈங்கு என
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி

**அரசன் வினாவும் கண்ணகி விடையும்**

நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய் !
யாரை யோநீ மடக்கொடி யோய் எனத்
தேரா மன்னா! செப்புவது உடையேன் !
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்! அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன் !
பெரும்பெயர்ப் புகார் என் பதியே ! அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப
சூழ்கழல் மன்னா! நின்நகர்ப் புகுந்து ஈங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி!
கண்ணகி என்பது என் பெயரே என

**பாண்டியன் கணவனைக் கொன்றது முறையே என்று கூற கண்ணகி கோவலன் கள்வனல்லன் என்பதை நிரூபித்தல்**

பெண் அணங்கே கள்வனைக் கோறல் கடுங்கோலன்று
வெள்வேல் கொற்றம் காண் என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!

@KTRS NOT TO BE REPUBLISHED

*என்கால் சிலம்பு, மணியுடை அரியே எனத்*
*தேமொழி! யுரைத்தது செவ்வை! நன்மொழி!*
*யாமுடைச் சிலம்பு, முத்துடை அரியே!*
*தருகெனத் தந்து தன்முன் வைப்பக்*
*கண்ணகி அணிமணிக் கால்சிலம்பு உடைப்ப*
*மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே!*

**உண்மையை உணர்ந்த அரசன் உயிர்துறத்தல்**

*மணிகண்டு தாழ்ந்த குடையன் தளர்ந்த செங் கோலன்!*
*பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட*
*யானோ அரசன்! யானே கள்வன்!*
*மன்பதை காக்கும் தென்புலம் காவல்*
*என்முதல் பிழைத்தது! கெடுகவென் ஆயுள் என*
*மன்னவன் மயங்கி வீழ்ந் தனனே! தென்னவன்*
*கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கி!*
*கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என்று*
*இணையடி தொழுது வீழ்ந் தனளே மடமொழி!*

- இளங்கோவடிகள்

NOT TO BE REPUBLISHED @KTBS

**ஆசிரியர் குறிப்பு:** சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். இவரது காலம் கி.பி. 2 - ஆம் நூற்றாண்டு ஆகும். இவர் சேர மன்னர் மரபில் தோன்றியவர். சமணத் துறவி. சேரன் செங்குட்டுவனின் தம்பி. சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு இளங்கோவடிகள் இக்காப்பியத்தை இயற்றினார்.

**நூல் குறிப்பு:** ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மை பெற்றது சிலப்பதிகாரம் ஆகும். ‘குடிமக்கள் காப்பியம்’ ‘முத்தமிழ்க்காப்பியம்’ ‘பெண் விடுதலை பேசும் காப்பியம்’

'நாடகக் காப்பியம்' என்றெல்லாம் போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். இங்குப் பாடமாக அமைந்த 'வழக்குரை காதை' சிலப்பதிகாரத்தின் உச்சகட்ட காட்சியாக அமைந்த பகுதியாகும். அதுவரை வீட்டிற்குள்ளேயே அடக்கமாக வாழ்ந்த கண்ணகி தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்ட வழக்குரைத்த பான்மையை இப்பகுதி விளக்குகிறது.

**அருஞ்சொற்பொருள்:** வாயிலோயே - வாயில் காப்பவனே, அறிவறை போகிய - அறிவு அற்ற, இறைமுறை - அரசநீதி, பிழைத்த - தவறிய, தென்னம் பொருப்பு - தெற்கே உள்ள பொதிகை மலை, தென்னவன் - பாண்டியன், குருதி - இரத்தம், தடக்கை - அகன்றகை, குறுகி- அணுகி, தேரா மன்னா - ஆராய்ந்து தெளியாத மன்னன், எள்ளறு - இகழ்தல் அற்ற, இமையவர் - தேவர், புள் - பறவை, புன்கண் - துன்பம், ஆழி - தேர்ச் சக்கரம், ஏசாச்சிறப்பு - குற்றமற்ற சிறப்பு, இசை - புகழ், ஊழ்வினை - முன்வினை, கோறல்-கொல்லுதல், கடுங்கோல்-கொடுங்கோன்மை, மணியுடை அரி - மாணிக்கக் கற்கள், மன்பதை - உலகம், பிழைத்தது - தவறியது.

## வழக்குரை காதை
## கருத்துரை

வாயில் காப்பவனே! வாயில் காப்பவனே! அறிவு முழுதும் அற்றுப்போன அறநினைவு அற்ற நெஞ்சத்துடன் அரசநீதியினின்றும் தவறியவனின் வாயில் காப்பவனே! பரலினையுடைய இரண்டு சிலம்புகளில் ஒன்றினைக் கையில் ஏந்தியவளாய்க் கணவனை இழந்த ஒருத்தி, நம் அரண்மனை வாயிலின்கண் உள்ளாள் என்று வேந்தனிடம் சென்று அறிவிப்பாய்! அறிவிப்பாய்! என்றாள். அது கேட்ட வாயிலோன் அரசனிடம் சென்று, "எமது கொற்கை வேந்தே! வாழ்க! தெற்கே உள்ள பொதிகை மலைக்குத் தலைவனே! வாழ்க! பாண்டியனே! வாழ்க! பழிச்சொற்கள் படராத பஞ்சவனே, வாழ்க! வெட்டு வாயினின்றும் பீறிட்டெழும் குருதி நீங்காத பசிய பிடர்த்தலை

என்னும் பீடத்தில் ஏறியிருந்த இளங்கொடியாகிய வெற்றி தரும் வேலினைத் தன் பெரிய கையிலே ஏந்திய கொற்றவையும் அல்லள்; கன்னியர் எழுவருள் பிடாரியும் அல்லள்; இறைவனை நடனமாடச் செய்த பத்திரகாளியும் அல்லள்; கண்டார்க்கு அச்சத்தைத் தரும் காட்டைத் தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள். தாருகனின் பரந்த மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; தனது உள்ளத்தில் கறுவு கொண்டவள் போலவும், மிக்க சினம் கொண்டவள் போலவும் விளங்குகின்றாள்! வேலைப்பாடு மிக்க பொற்சிலம்பு ஒன்றினைக் கையில் ஏந்தியவளாய்த் திகழ்கிறாள்! கணவனை இழந்த அவள் நம் வாயிலின் முன்னே நிற்கின்றாள் என்று அறிவித்தான்.

"அத்தகையவளை வருக எனக்கூறி இங்கே அழைத்து வருக"! என மன்னன் ஆணையிட்டான். கண்ணகி அரசனை அணுகிய போது, மன்னன் "நீர்பெருகும் கண்களையுடையவளே! என் முன் வந்து நிற்பவளே! இளங்கொடி போன்றவளே! நீ யார்" ? என்று கேட்டான்.

ஆராய்ச்சி இல்லாத மன்னனே! நின்னிடம் யான் கூறுவதைக் கேட்பாயாக! இகழ்தல் அற்ற சிறப்பினை உடைய தேவர்களும் வியப்புறுமாறு, புறா ஒன்றின் துயரத்தினைப் போக்கிய சிபியும் கட்டிய மணியின் நடுவில் உள்ள நாவானது அசைய, பசுவின் கடைக்கண்களினின்றும் ஒழுகும் நீர் தனது உள்ளத்தைச் சுட, தானே தன் அரும்பெறல் புதல்வனைத் தேர்ச் சக்கரத்தில் இட்டு கொன்ற மனுநீதிச் சோழனும் ஆட்சி செய்த புகழ்மிக்க புகார் நகரமே நான் பிறந்த ஊர். அவ்வூரில் பழியற்ற சிறப்பினை உடைய பெருங்குடியில் பிறந்த மாசாத்துவான் என்னும் வணிகனுக்கு மகனாகத் தோன்றி, பொருளீட்டி, வாழ்தலை விரும்பி, முன்னைத் தீவினை செலுத்துதலால் சூழ் கழல் அணிந்த மன்னனே! நினது மதுரை நகரத்தினுள் புகுந்து, இங்கு என் காற்

© TNTB NOT TO BE REPUBLISHED

சிலம்பினை விற்றல் காரணமாக நின்னிடத்துக் கொலையுண்ட கோவலன் மனைவி நான். என் பெயர் கண்ணகி! "என்றாள்"

அது கேட்ட மன்னன், "பெண் அணங்கே"! கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோன்மை அன்று! அதுவே அரச நீதி! என்றான். கண்ணகி, ''அறநெறியில் செல்லாத கொற்கை வேந்தே! என் கால் சிலம்பு மாணிக்கக் கற்களைப் பரல்களாகக் கொண்டது'' ! என்றாள். பாண்டியனோ, தேன் போலும் இனிய மொழி பேசுபவளே! நீ உரைத்தவை நீதியை நிலைநாட்ட உதவும் நல்ல சொற்களாகும்! எம் சிலம்பு முத்துக்களைப் பரல்களாகக் கொண்டது! என்று கூறி, ஏவலரை நோக்கி, முன்னர்க் கோவலனிடமிருந்து பெற்ற அச்சிலம்பைக் கொணர்க! என வரவழைத்து அதனைக் கண்ணகி முன் வைத்தான். கண்ணகி அச்சிலம்பை வீசியெறிந்து உடைத்த அளவில், அதனினின்றும் எழுந்த மாணிக்கப் பரல் ஒன்று பாண்டியனின் வாயருகே தெறித்து கீழே வீழ்ந்தது.

அவ்வாறு தெறித்த மாணிக்கப் பரல் கண்டு திடுக்கிட்ட பார்வேந்தன், தாழ்வுற்ற குடையனாய், தளர்ந்த செங்கோலனாய், பொன் செய் கொல்லன் பொய்யுரை கேட்டு நீதி தவறிய யானோ அரசன்? யானே கள்வன்? என்று கூறி உள்ளம் துடித்தான். மக்களைக் காக்கும் பாண்டி நாட்டு ஆட்சிக்கு என் காரணமாக இழுக்கு ஏற்பட்டு விட்டதே எனப் பதறினான். கெடுக! என் ஆயுள் எனக் கூறியவாறு மயங்கி வீழ்ந்து மாண்டு போனான்! தென்னவனின் தெய்வக் கற்பினளாகிய கோப்பெருந்தேவி உள்ளம் குலைந்தாள்; உடல் நடுங்கினாள்; தாய் தந்தையரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டி ஆறுதல் கூற முடியும்! ஆனால் கணவனை இழந்தோர்க்கு அவ்வாறு காட்டலாகாது எனக் கருதித் தன் கணவனின் இணையடிகளைத் தொட்டு வணங்கி வீழ்ந்து இறந்தாள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. தென்னம் பொருப்பின் தலைவன் யார்?
2. பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி யார்?
3. பாண்டியனைக் கண்ணகி எவ்வாறு விளித்தாள்?
4. தன் புதல்வனைத் தேர்க்காலில் கொன்ற மன்னன் பெயர் என்ன?
5. கண்ணகி உடைத்த சிலம்பின் மணி எங்கு தெறித்தது?
6. பாண்டியன் இறந்ததைக் கண்ட கோப்பெருந்தேவி என்ன செய்தாள்?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. கண்ணகி வாயிலோனிடம் என்ன கூறினாள்?
2. வாயிலோன் பாண்டியனை எவ்வாறு வாழ்த்துகிறான்?
3. கண்ணகியைப் பார்த்த பாண்டியன் என்ன வினவினான்?
4. தன் தவறை உணர்ந்த பாண்டியன் செய்தது யாது?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றத்தையும் சீற்றத்தையும் மன்னனுக்கு எவ்வாறு உரைத்தான்?
2. புகார் நகரின் சிறப்பு பற்றிக் கண்ணகி கூறியது யாது?
3. கண்ணகி வழக்குரைத்த பாங்கை விளக்கி வரைக?

**II. அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-**

1. "கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று"
2. "நீர்வார் கண்ணை எம் முன் வந்தோய்"

NOT TO BE REPUBLISHED
©KTBS

3. “என்கால் பொற்சிலம்பு மணியுடை அரியே”

4. “யானோ அரசன் யானே கள்வன்”

5. “கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்”

**III கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. அறுவர்க்கு இளைய நங்கை ______________
2. தாருகனின் மார்பைக் கிழித்த பெண் ______________
3. கண்ணகியின் காற்சிலம்பு ______________ பரல்களாக உடையது.
4. கோவலனின் தந்தை பெயர் ______________
5. புறாவின் துன்பத்தைத் தீர்த்த மன்னன் பெயர் __________

**IV சேர்த்து எழுதுக:-**

கொற்றவை + அல்லள், புகுந்து + ஈங்கு, காண் + என

**V பிரித்து எழுதுக:-**

கணவனையிழந்தாள், பெருங்குடி, அறிவிப்பாயென, பெயரேயென

**VI எதிர்ச்சொல் தருக:-**

இழந்தாள்

ஈங்கு

தருக

**செய்முறை:-**

கண்ணகியின் வழக்குரைத்த திறத்தினை ஓரங்க நாடகமாக நடித்துக் காட்டுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## IV. பல்சுவை பாடல்கள்

### 1. இரட்டுற மொழிதல்

### குதிரைக்கும் காவிரிக்கும்

M9E1T1

ஓடுஞ் சுழிசுத்த முண்டாகும் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரி யாமே.

-காளமேகப்புலவர்

**நூல் குறிப்பு :** வசை பாடக் காளமேகம் என்று புகழப் பெற்ற காளமேகப் புலவரின் தனிப் பாடல்களைக் கொண்டது இந்நூல். புலவரின் உணர்ச்சிகளை உள்ளதை உள்ளபடியே வெளியிடும் நிலையில் இந்நூலில் பாடல்கள் அமைந்துள்ளன.

**ஆசிரியர் குறிப்பு :** காளமேகப் புலவர் சோழ நாட்டிலுள்ள திருக்குடந்தைப் பகுதியிலே தோன்றியவர். இவருடைய இயற் பெயர் வரதன் என்பர் ஆராய்ச்சி வல்லுநர் மு.இராகவையங்கார். இறைவியின் அருளினால் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைக் கவிகளையும் காளமேகத்தைப் போலப் பொழிதலைத் தொடங்கிய பின்னரே காளமேகம் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

**நினைவிற் கொள்க :** ஒரு சொல்லோ தொடரோ இரு பொருள் படுமாறு பாடுவது இரட்டுற மொழிதல் அல்லது சிலேடை எனப்படும்.

**அருஞ் சொற்பொருள்:** துன்னலர் - பகைவர்; பரிவு - அன்பு; பரி - குதிரை; சாடும் - மோதும்.

**கருத்துரை :** நாடெங்கும் அறியும்படியாகத் தேடின புகழை உடையவனாகிய திருமலைராயனின் வரையிடத்திலே ஆட்டக் குதிரையானது ஓடிச் செல்லும் சுத்தமான சுழிகளை உடைய தாய் இருக்கும்; பகைவரை மோதி அழிக்கும் தன் தலைவனிடத்து அன்புடன் தலைசாய்த்து நிற்கும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

காவிரியானது ஓட்டத்தை உடையதாய் இருக்கும். அப்படிச் செல்லும் போது நீர்ச் சுழிகளை உடையதாய் இருக்கும். குளிப் பவர்க்குச் சுத்தத்தையும் தரும். நெருங்கிய மலர்களை அலைத்து எறியும். குதிரை வாயின் நுரை போன்ற அலைகளை மடக்கி வீசும். இதனால் இரண்டும் தம்முள் நிகரானவை ஆகும்.

## பயிற்சி

**I. ஓரிரு தொடர்களில் விடைதருக:-**

அ) திருமலைராயனின் வரையிடத்தில் எது ஓடிச் செல்லும்?

ஆ) திருமலைராயன் எத்தகையன்?

இ) குதிரையானது தன் தலைவனிடத்து எப்படியிருக்கும்?

**II. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:**

அ) காளமேகப் புலவனின் பாடலில் வரும் இரட்டுற மொழிதல் பொருளினை விளக்கி எழுதுக.

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

அ) ஓடும் ________________ சுத்தமுண்டாகும்.

ஆ) ஆடு ________________ காவிரியாமே.

**IV. சேர்த்தெழுதுக:**

நாடு + அறிய

**V. பிரித்தெழுதுக:**

சுத்தமுண்டாகும்

**VI. எதிர்ச்சொல் தருக:**

சுத்தம்

புகழ்

துன்னலர்

©KTBS NOT TO BE REPUBLISHED

## 2. திருக்குற்றாலக் குறவஞ்சி

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரை எழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம் பிறைமுடித்த வேணி அலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே

-திரிகூட ராசப்பக்கவிராயர்

**நூற் குறிப்பு :** குறவஞ்சி என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். திருக்குற்றாலமலையில் கோயில் கொண்டுள்ள திருக் குற்றாலநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குறத்தி பாடுவதாக அமைந்த இந்நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி எனப் பெயர் பெற்றுள்ளது. நாட்டுவளம், மலைவளம், மலைவாழ் மக்கள் இயல்புகள், குறிசொல்லுதல் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றது. ஆடல், பாடலுக்கேற்ற சந்தநயம் கொண்ட நாட்டிய நாடக நூலாகக் குற்றாலக் குறவஞ்சி திகழ்கிறது.

**ஆசிரியர் குறிப்பு :** திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார். இவருடைய காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டு ஆகும். இவர் பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்து வந்த முத்துவிசயரங்க சொக்கலிங்க நாயக்கரால் ஆதரிக்கப்பட்டவர். திரிகூடராசப்பக் கவிராயரின் கவித்திறனைப் பாராட்டி நாயக்கர் நன்செய் நிலத்தைப் பரிசாக அளித்தார். அந்நிலம் இப்பொழுது குறிஞ்சி மேடு என அழைக்கப்படுகிறது.

**அருஞ்சொற்பொருள் :** வான்கவி - தேவர்கள், கானவர்கள் - வேடுவர்கள், கமனசித்தர் - வானில் இயங்கும் சித்தர், காயசித்தி - மூலிகைச்செடி, கூனல் - வளைந்த, வேணி - தலை.

© KTBS NOT TO BE REPUBLISHED

**கருத்துரை :** ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண்குரங்குகளைக் கொஞ்சும். அக்குரங்குகளின் எச்சில்பட்டுச் சிதறி விழுகின்ற பழங்களை அவ்வாண் குரங்குகள் இரந்து, கெஞ்சிக் கேட்கின்றன. வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப் பார்த்து தேவர்களை அழைப்பார்கள். வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள். தேன்கலந்த மலையருவியின் அலைகள் மேலெழுந்து வானத்திலிருந்து வழிந்து ஓடும். அதனால் செங்கதிரவனின் தேர்க்கால்களும், குதிரைக் கால்களும் வழுக்கி விழும். வளைந்த இளம்பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றாலநாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச்சிறப்பு வாய்ந்த திரிகூட மலையே எங்கள் மலையாகும்.

### பயிற்சி

**I. அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. ஆண் குரங்குகள் பெண் குரங்குகளுக்கு எவற்றைக் கொடுத்தன?
2. தேவர்கள் எதனைக் கெஞ்சிக் கேட்பர்?
3. காயசித்தியை விளைவிப்பவர்கள் யார்?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. செங்கதிரோன் தேர்க்காலும், பரிக்காலும் ஏன் வழுக்கின?
2. குற்றாலநாதரின் தோற்றப் பொலிவைக் கூறுக.

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. குற்றாலமலையின் வளத்தினைத் திரிகூடராசப்பக் கவிராயர் எவ்வாறு வருணிக்கிறார்?

**II. அ) பிரித்து எழுதுக :** வான்கவி, கூனலிளம்

**ஆ) சேர்த்து எழுதுக:** வேணி + அலங்காரர், வழி + எறிந்து

© KTBS NOT TO BE REPUBLISHED

## 3. கலிங்கத்துப் பரணி

## போர் பாடியது

## போரின் பேரொலி

S1S9Q2

*எடும்! எடும்! எடும்! என எடுத்தது ஓர்*
*இகல் ஒலி கடல்ஒலி இகக்கவே!*
*விடு! விடு! விடு! பரிகரிக்குழாம்*
*விடும்! விடும்! எனும் ஒலி மிகைக்கவே!*

*வெருவர வரிசிலை தெறித்த நாண்*
*விசைபடு திசைமுகம் வெடிக்கவே!*
*செரு இடை அவரவர் தெழித்தது ஓர்*
*தெழி உலகுகள் செவிடு எடுக்கவே!*

- செயங் கொண்டார்

**நூற்குறிப்பு:** பரணி என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் பரணி என்று வழங்குவர்.

சோழப் பேரரசன், முதலாம் குலோத்துங்கனுக்கும் கலிங்க மன்னன் அனந்தபத்மனுக்கும் நடந்த போரைப் பற்றிப் பாடுவதே போர் பாடியது ஆகும். இது வீரச்சுவை மிகுந்த பகுதி ஆகும்.

**ஆசிரியர் குறிப்பு:** கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் செயங்கொண்டார் ஆவார். கி.பி.1070 முதல் 1118 வரை சோழ நாட்டை ஆண்ட முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவர். இந்நூலின் சிறப்பு காரணமாகவே பரணிக்கோர் செயங்கொண்டார் என்று புகழப்பட்டவர்.

**அருஞ்சொற்பொருள்:** எடும் - தொடங்குங்கள், எடுத்தது - உரைத்துக் கூவுவது, ஓர் - ஒப்பற்ற, இகல் - போர், இகக்க - வெல்ல, விடு - ஏவு, பரி - குதிரை, கரி - யானை, மிகைக்க - மிகுதியாக உண்டாக. வெருவர - அஞ்சும்படி, வரிசிலை - கட்டமைந்த வில், தெறித்த - துள்ளி எழுந்த, விசைபடு -

©KTBS NOT TO BE REPUBLISHED

வேகம் பொருந்திய, திசை முகம் - திக்குகளாகிய இடங்கள், வெடிக்க - பிளக்க, செரு இடை - போர்க்களத்தில், இளையவர் - வீரர், தெழித்தது - ஆரவாரித்தது, எடுக்க - பட

**கருத்துரை:-**

1. போரைத் தொடங்குங்கள், தொடங்குங்கள் என உரக்கக் கூறும் ஒப்பற்ற போரின் ஒலியானது கடலின் ஒலியை வென்றிடவும் குதிரைப்படைகளையும் யானைப் படைகளையும் பகைவர் மேல் ஏவுங்கள் எனக் கூறிடும் வீரர்களின் ஒலியானது மிகுதியாகத் தோன்றியது.
2. எவரும் அஞ்சுமாறு கட்டமைந்த வில்லிலிருந்து விரைவாகத் துள்ளியெழும் நாண் ஓசையினால் திசைகள் பிளக்கின்றன. அவ்வாறு திசைகள் பிளக்கும் ஓசையும் போர்க்களத்தில் அந்தந்த வீரர்களின் ஆரவாரத்தால் எழும் முழக்கத்தின் ஓசையும் உலகிலுள்ளோர் செவிடுபடும்படியாக இருந்தன.

**பயிற்சி**

**I. அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் யார்?
2. போர் பாடியது என்றால் என்ன?
3. கடலின் ஒலியை எவ்வொலி வென்றது?

**ஆ) இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக:-**

1. திசைகள் எவ்வாறு பிளந்தன?
2. உலகில் உள்ளோர் எதனால் செவிடாயினர்?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. போரில் எழுந்த பல்வேறு ஓசைகளைச் செயங்கொண்டார் எவ்வாறு வருணிக்கிறார்?

**II. அ) சேர்த்து எழுதுக:** திசை + முகம், அவர் + அவர்

**ஆ) பிரித்து எழுதுக :** பரிக்குழாம், இகழ்ஒலி

© KTBS NOT TO BE REPUBLISHED

## V. மறுமலர்ச்சிக் கவிதைகள்

W3Q2R6

### 1. உலகமயமானவன்

ஒரு பூதம் வருகிறது
உலக பூதம்
கோட்டு சூட்டு அணிந்த
நாகரிக பூதம்

அட்லாண்டிக் கடலில் ஒரு காலூன்றி
பசிபிக் கடலில் மறுகா லூன்றி
வங்காள விரிகுடாவில் வாய்கொப்பளித்து
கண்டங்கள் உண்ண வரும் மேற்கு பூதம்

வளரா நாடுகளைத் தின்று முடித்து
வளரும் நாடுகளில் கை துடைத்து
ஏழை நாடுகளை
வெற்றிலை போடும்
வியாபார பூதம்

மாடி மனைகளை
மேலும் மேலும் விண்ணில் ஏற்றுமாம் !
குடிசைகளை மிதித்து
குழிக்குள் தள்ளுமாம்!

வேலையிழந்த சிற்றூர் மக்களே!
ஒரே துடைப்பத்தில் வாரிப் பெருக்கி
நகரத் தொட்டிகளில்
குப்பையாய்க் கொட்டுமாம்!

"நில்லாய் நெடும் பூதமே!
ஊரழிக்க வந்த உன்
ஊர் சொல்லிப் போ!" என்றேன்
கடைவாயில் தேசங்கள் ஒழுக
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றது

@KTBS NOT TO BE REPUBLISHED

"பேர் என்னசொல்" என்றேன்

"உலகமயமானவன்" என்றது.

- வைரமுத்து

**ஆசிரியர் குறிப்பு:** கவிப்பேரரசு, பத்மஸ்ரீ, வைரமுத்து அவர்கள் 13-7-1953 அன்று பெரியகுளம் வட்டம். வடுகப்பட்டியில் பிறந்தார். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். தமிழ்த் திரைப்படத் துறையில் முன்னணிக் கவிஞராகத் திகழ்கிறார். சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்கான விருதினைக் குடியரசுத் தலைவரிடம் பல முறை பெற்றுள்ளார். மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள இவர் கவிதை, கட்டுரை, கதை, ஆகிய பல்துறைகளிலும் நூல்கள் பல படைத்துள்ளார். என் பழைய பனை ஓலைகள், கவிராசன் கதை, திருத்தி எழுதிய தீர்ப்புகள், கள்ளிக்காட்டு இதிகாசம் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார்.

"கொஞ்சம் தேனீர் நிறைய வானம்" என்னும் கவிதைத் தொகுப் பிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது.

**கருத்துரை:**

கோட்டும் சூட்டும் அணிந்த நாகரிக பூதம் ஒன்றுவருகிறது. இதற்குப் பல பெயர்கள் சூட்டலாம். முதலில் இது ஓர் உலக பூதம்.

மேலும் இம் மேற்கு பூதம் அட்லாண்டிக் கடலில் ஒரு கால் ஊன்றி, மறுகாலைப் பசிபிக் கடலில் ஊன்றி, வங்காள விரிகுடாவில் வாய் கொப்பளித்துக் கண்டங்களையே உண்ணும்.

இப்பூதத்திற்கு வியாபார பூதம் என்றும் பெயர் உண்டு. இப் பூதம் பொருளாதாரத்தில் வளர்ச்சி இல்லாத நாடுகளைத் தின்று முடித்து விட்டு வளரும் நாடுகளில் கைதுடைத்து ஏழை நாடுகளை வெற்றிலையாகப் போட்டுத் தின்று விடும்.

இது மாடி மனைகள் உள்ள செல்வநாடுகளை மேலும் மேலும் உயர்த்தி விண்ணில் ஏற்றும். குடிசைகளை மிதித்துக் குழிக்குள் தள்ளிவிடும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இது வேலை இழந்த சிற்றூர் மக்களை ஒரே துடைப்பத்தில் வாரிப் பெருக்கி நகரத் தொட்டிகளில் குப்பையாய்க் கொட்டும்.

நெடும் பூதமே! நில் என்று கவிஞர் அதனை அழைத்து ஊரை அழிக்க வந்த உன் ஊர் சொல்லிவிட்டுப்போ என்றார். அதுவோ கடைவாயில் தேசங்கள் ஒழுகிட "எல்லா ஊர்களும் நம் ஊரே; எல்லோரும் நம் உறவினரே !" என்று கூறியது. மீண்டும் கவிஞர் உன் பெயர் என்ன? சொல் என்று கேட்டதும், என் பெயர் "உலகமயமானவன்" என்றது.

**அருஞ்சொற்பொருள்**

கேளிர் = உறவினர்

**I. அ) ஓரிரு தொடர்களில் விடைஎழுதுக:-**

1. பூதத்தின் ஆடை யாது?
2. பூதம் தன் கால்களை ஊன்றிய இருஇடங்களைக் குறிப்பிடுக?
3. மேற்குப் பூதம் உண்பது யாது?
4. பூதம் தின்றபின் கைதுடைத்த நாடுகளின் நிலை யாது?
5. பூதத்திற்கு கொடுக்கப் படும் அடைமொழிகளில் ஏதேனும் ஒன்று எழுதுக?
6. பேர் கேட்ட கவிஞருக்குப் பூதம் கூறிய விடை என்ன?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடைஎழுதுக:-**

1. பூதம் கடல்களையும் கண்டங்களையும் எவ்வாறு பயன்படுத்திக் கொல்கிறது?
2. பூதம் எவற்றை விண்ணில் ஏற்றுகிறது?
3. பூதம் குப்பையாய் எவற்றைப் பெருக்கிக் கொட்டியது?

**இ) ஐந்து அல்லது ஆறுதொடர்களில் விடை எழுதுக:-**

1. பூதத்தின் செயல்கள் யாவை?
2. பூதத்தின் உணவும் செயல்களும் யாவை?

© KTBS NOT TO BE REPUBLISHED

**II இடம்சுட்டிப் பொருள் விளக்குக**

1. கோட்டு சூட்டு அணிந்த
நாகரிக பூதம்
2. ஏழை நாடுகளை
வெற்றிலை போடும்
வியாபார பூதம்
3. குடிசைகளை மிதித்து
குழிக்குள் தள்ளுமாம்
4. ஊரழிக்க வந்த உன்
ஊர் சொல்லிப் போ என்றேன்
5. பேர் என்னசொல் என்றேன்
உலகமயமானவன் என்றது

**III கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வளரும் நாடுகளில் ____________
2. நகரத் தொட்டிகளில் ______________ கொட்டுமாம்
3. கடைவாயில் தேசங்கள் ____________
4. யாதும் ஊரே யாவரும் __________ என்றது

**IV எதிர்ச்சொல் தருக:**

குழி
ஏற்று
இழந்த
சிற்றூர்
நில்

**தெரிந்து கொள்க:**

ஒரு பொருளை விற்க உலகையே சந்தையாக்குதல் ஆகும் (Globalisation) . இது செல்வரை மேலும் செல்வராக்கி ஏழையை மேலும் ஏழையாக்குகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 2. சர்வக்ஞர் வெண்பா

### கல்வி

1. *கல்வியே தாய்தந்தை; நல்லறிவே தம்பியண்ணன்;*
*அல்லல் வருங்கால் அருந்தோழன்; - கல்விவல்லார்*
*உள்ளஇடம் தானே உயர்அரசாம்; சர்வக்ஞ!*
*தெள்ளித் தெளிகல்விச் சீர்.*

### உழவு

2. கோடித் தொழில்களிலே மேழித் தொழில்மேலாம்
மேழியினால் நூலுருளை மேவிடுமே; மேழித்தொழில்
கைம்மடங்கின் சோறின்றி நாட்டுமக்கள் ஆட்டமனைத்
தும்மடங்கும்; சர்வக்ஞ! ஓர்.

பேரா. தா-கிருட்டினமூர்த்தி

**நூற்குறிப்பு:** சர்வக்ஞர் என்ற அறவாணர் இயற்றிய 'சர்வக்ஞர் வசனகளு' என்ற நூல் 'சர்வக்ஞர் வெண்பா' என்ற பெயரில்தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கன்னடத்தில் திரிபதி என்னும் பாடல் வகையிலும், உரைப்பா எனச் சொல்லப்படுகின்ற வசனங்கள் அமைப்பிலும் சர்வக்ஞர் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் புனைந்துள்ளார். இந்நூலில் உலகத்தில் உள்ள அனைத்தும் சொல்லப் பட்டிருக்கின்றன என்று அறிஞர் கூறுவர். ''ஆடு தொடாத இலையில்லை ; சர்வக்ஞர் சொல்லாத செய்தியில்லை'' என்பது இக்கருத்தை விளக்க வந்த பழமொழி. இப்பாடல்கள் தமிழில் நாலடி வெண்பாக்களாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

**ஆசிரியர் குறிப்பு:** கி.பி. 16.ஆம் நூற்றாண்டில் கன்னடத்தில் மிகச் சிறந்த சிந்தனையாளராகவும், சீர்திருத்தச் செம்மலாகவும் விளங்கிப் புரட்சிக் கருத்துக்கள் பலவற்றைக் கன்னட உலகுக்குத் தந்தவர் சர்வக்ஞர் என்பவர் ஆவர். இவருடைய பாடல் ஒவ்வொன்றிலும் இறுதியில் சர்வக்ஞ என்ற சொல்

Z2V9X5
NOT TO BE REPUBLISHED ©KTBS

வருவதால் இவர் சர்வக்ஞர் என்ற பெயாரல் அழைக்கப்பட்டார் என்றும், சர்வக்ஞர் என்ற சொல்லுக்கு அனைத்தும் அறிந்தவர் என்ற பொருள் இருப்பதால், இவரது உயர்வு கருதிப் பின் வந்தோர் இவரைச் சர்வக்ஞர் என்று சிறப்பித்துப் பெயரிட்டழைத்தனர் என்றும் இருவகையாக இவருடைய பெயருக்குக் காரணம் கூறுவர். இவர் தார்வார் - மாவட்டத்திலுள்ள மாசூரைச் சார்ந்தவர் என்றும் பசவரசன் மல்லம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் என்றும் கூறுவர்.

பெங்களூர் மகாராணி கலைக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் தா. கிருட்டினமூர்த்தி அவர்கள் சர்வக்ஞர் வசனங்களைத் தமிழில் 'சர்வக்ஞர் வெண்பா' என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார்.

**அருஞ்சொற்பொருள்:** அல்லல் - துன்பம்; கல்விச்சீர் - கல்வியின் சிறப்பு; மேழி - ஏர், கலப்பை; கைம்மடங்கின் - செய்யப்பட வில்லை யென்றால்; ஆட்டம் - கொண்டாட்டம், வாழ்வு; அடங்கும் - முடங்கிப் போகும்.

**கருத்துரை:**

**கல்வி:** ஒருவனுக்கு அவனைப் பெற்றெடுத்த தாய்தந்தை யரைவிட அதிகச் சிறப்புக்குரியது. அவன் பெற்ற கல்வியே; அக்கல்வியின் மூலம் அவன் அடைந்த நல்லறிவே அவனுடைய அண்ணன் தம்பியை விட அவனுக்கு மிகவும் பயன்படக் கூடியது. துன்ப காலத்தில் தோள் கொடுக்கும் நண்பனை விட மிகவும் உற்ற துணையாக இருப்பது அவனுக்குக் கிடைத்த கல்வியே. கல்வி கற்றவர்கள் இருக்கின்ற இடமே உயர்ந்த அரசன் வீற்றிருக்கின்ற அரசவை போன்றது. சர்வக்ஞனே! கல்வியின் சிறப்பினை இவ்வாறு தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்வாயாக!

**உழவு:** மக்கள் செய்யும் கோடிக்கணக்கான தொழில்களிலே ஏர் கொண்டு செய்யும் உழவுத் தொழிலே மிகச் சிறந்த தொழிலாகும். உழவுத் தொழிலினாலேயே நூல் நூற்கின்ற உருளையும் அதனால் நெய்யப் படுகின்ற ஆடையும் உருவாகும். உழவுத் தொழில் மேற்கொள்ளப்

NOT TO BE REPUBLISHED @TNTBS

படவில்லை யென்றால் உண்ணுவதற்கு உணவின்றி நாட்டு மக்களின் வாழ்வனைத்தும் முடங்கிச் செயலற்றுப் போய் விடும் சர்வக்ஞனே! இதனை அறிந்து கொள்வாயாக!

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. ஒருவனுக்குத் தாய் தந்தையரை விடச் சிறப்புக்குரியது எது?
2. துன்பகாலத்தில் தோள் கொடுப்பவன் யார்?
3. அரசவை போன்ற இடம் எது?
4. கோடிக் கணக்கான தொழில்களில் சிறந்த தொழில் எது?
5. உழவுத் தொழிலால் நடக்கும் தொழில்கள் யாவை?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. சர்வக்ஞர் பற்றிக் குறிப்பு வரைக

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. கல்வியின் சிறப்பைச் சர்வக்ஞர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்?
2. உழவும் அதன் சிறப்பும் பற்றிச் சர்வக்ஞர் கூறும் கருத்துக்களை எழுதுக

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:**

1. "கல்வியே தாய்தந்தை; நல்லறிவே தம்பியண்ணன்"
2. "மேழியினால் நூலுருளை மேவிடுமே"

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. கல்வியே ________ நல்லறிவே __________
2. கோடித் தொழில்களிலே __________ தொழில் மேலாம்

**III அ) பிரித்து எழுதுக:** தம்பியண்ணன்₹, கல்விவல்லார், நூலுருளை, ஆட்ட மனைத்தும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

S9S1J7

# 1. அழகின் சிரிப்பில் உவமை அழகு

**முனைவர். பா. கோபாலன்**

*(சமுதாயத்திற்குப் பயன்தரும் இலக்கியங்களே வாழும் இலக்கியங்கள். இவ்விலக்கியங்களைப் படைப்பவர் அரிய கருத்துக்களை மிக எளிய உவமைகளின் மூலம் விளக்கி உணர்த்துவர். இலக்கியங்களில் உவமை இடம் பெறுவது, அவ்விலக்கியம் கூறும் கருத்தினை எளிமையாக்குவதற்குத்தான். பாவேந்தர் பாரதிதாசன் இயற்றியுள்ள அழகின் சிரிப்பில் உவமை அழகு அமைந்துள்ள பாங்கினை இக்கட்டுரை விளக்குகின்றது.)*

உவமை என்னும் சொல் ஒப்புமை என்று பொருள்படும். ஒரு பொருளைப் பற்றிக் கூறும்போது அதனை விளக்க அதைப்போன்ற இன்னொரு பொருளுடன் ஒப்புமைப்படுத்தி விளக்குவது உவமையாகும்.

பாவேந்தர் பாரதிதாசனும் பயன் மிக்க இவ்வுவமையின் தகுதியைப் பொருத்தமுறக் கண்டு தெளிந்தவர். தம் நூல்கள் அனைத்திலும் தம் உவமைத்திறத்தை உயர்வுற உலவவிட்டுக் கவிதைப் பயிர் செழித்து வளரத் துணைபுரிகிறார்.

இயற்கைப் பொருள்களில் சிறந்து தோன்றிச் சிரிக்கும் அழகைக் காணவும் உணரவும் உணர்ந்தவற்றைச் சொற்சித்திரமாகப் படைத்து மற்றவர்களும் சுவைக்குமாறு தருவதைக் கவிஞர்கள்தான் செய்வர். இயற்கையில் சிரிக்கும் அழகைச் சிறப்பாக மற்றவர்களுக்குக் காட்டுவதற்கு உவமைத் திறம் இன்றியமையாதது எனலாம். இதனை உணர்ந்து பாவேந்தர் தமது படைப்பான “அழகின் சிரிப்பில்” உவமைகளைக் கவினுறக் கையாளுகிறார். அழகின் சிரிப்பில் பாவேந்தர் கையாளும் உவமைகளைக் காண்போம்.

**கடல் :-** கடற்கரைக்குக் கவிஞர் செல்கிறார். கடலின் அலைகளையும் மணற்பரப்பையும் கண்ட கவிஞர் ஓர் உவமை மூலம் இரண்டையும் விளக்குகிறார்.

©KTBS NOT TO BE REPUBLISHED



“ பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை; அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்
புரண்டிடும்; பாராய் தம்பி!”

NOT TO BE REPUBLISHED @KTBS

மணற் பரப்பு கீரியின் உடல் வண்ணம் போல் கவிஞருக்குக் காட்சியளிக்கிறது. மணற் பரப்பை மெத்தைக்கு உவமையாக்கு கிறார். அம்மெத்தைமேல் அலைகள் வீசுகின்றன. இது கல்வி நிலையத்தின் இளைஞர்தம் நெஞ்சம்போல் பூரிப்பால் ஏறும்; விழும்; புரண்டு ஓடும் என்கிறார். மேலும் அலைகள் பற்றிக் கவிஞர் கூறுகையில் வெண்ணிற அன்னக் கூட்டமானது விளையாடி வீழ்வதைப் போலத் துள்ளித்துள்ளி அலைகள் கரையினில் சுழன்று சுழன்று வீழ்கின்றன என்கிறார் .

இதனை-

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப் போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!

என்ற பாடல் வரிகள் காட்டுகின்றன.

**ஆல்: - (ஆலமரம்):** ஆல் என்னும் தலைப்பில் அமையும் பாடலிலும் உவமையைப் பயன்படுத்தியுள்ளார். ஆலமரக்கிளையில் பாம்பு தொங்கியது. அதனை விழுது என்று கருதிய மந்தி தொட்டுவிட்டு "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கென்று" "குதித்ததைப் போல்" கிளைகள் தோறும் குதித்துத் தாவிக் கீழே இருந்த விழுதுகளை எல்லாம் ஒளிப்பாம்புகள் என்று எண்ணி உச்சிக் கிளைக்குச் சென்றது. அங்கு, அக்குரங்கு தன் வாலையே பாம்பென அச்சத்துடன் கண்டு மருள்கிறது.

"கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனத் குதித்ததைப்போல்
கிளை தொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சி போய்த் தன் வால் பார்க்கும்"

இப்பாடலில் கள்ளமற்ற உள்ளமுடைய சிறுகுழந்தை யின் செயலுக்குக் குரங்கின் செயல் உவமிக்கப்பட்டு இயற்கையில் நிகழும் காட்சி நம் மனக்கண் முன் நிறுத்தப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

**புறாக்கள்:-**



புறாக்களின் வாழ்வு கொண்டு மாந்தர்க்கு ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் கற்பிக்கும் பாவேந்தர் புறாக்களின் பலநிறத்தையும் செயல்களையும் படம் பிடித்துக் காட்டி நயமிகு உவமைகளைக் கையாள்கிறார்.

கூட்டினின்று வெளிப்படும் புறாக்கள் கீழ் சரிந்த கோட்டுப் பூப்போல் கூட்டினின்று குதிக்கின்றன என்கிறார், கோட்டுப் பூவிற்குப் புறாக்களை ஒப்புமைப் படுத்துகிறார். இதனை.

...................கூட்டைத்
திறந்ததும் கீழ்ச் சரிந்த
கோட்டுப் பூப்போற் புறாக்கள்
குதித்தன கூட்டி னின்றே!

என்றபாடல் வரிகள் காட்டுகின்றன. இப்புறாக்கள் இரையுண்ணும் போது, புறாக்கள் பார்பதற்கு தாமரைப் பூ இதழ் விரிந்திருத்தல் போல இருக்கிறது என்கிறார் கவிஞர். இதனை,

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் ..................

© KTBS NOT TO BE REPUBLISHED

என்ற பாடல் வரிகள் கூறுகின்றன. இரையுண்ணப் புறாக்கள் வட்டமாக அமர்ந்திருக்கும் காட்சியைத் தாமரை இதழ் விரிந்திருப்பதற்கு உவமிக்கிறார்.

**கிளி:-** கிளியின் உருவம் பற்றிக் கூறும் போது உவமையுடன் தொடங்குகிறார். கிளி இலவின் காய்போன்ற மேனியும் சிவந்த மூக்கும் மணத்தக்காளி போல் எழில் ஒளி செய்யும் கண்ணும் ஒளிதழுவும் மாமரத்தின் நீண்ட இலைபோன்ற வாலும் பெற்றிருக்கிறது. கிளியின் உறுப்புகளுக்குத் தகுந்த வண்ண ஒப்புமைப் பொருள்களைப் பாவேந்தர் குறிப்பிட்டுக் கோலமிகு வண்ணக் கிளியை நம் கண்முன் காட்சிப்படுத்துகிறார் எனலாம்.

இலவின் காய் போலும் செக்கச்
செவேலென இருக்கும் மூக்கும்
இலகிடு மணல் தக்காளி
எழில்ஒளிச் செங்காய்க் கண்ணும்
நிலைஒளி தழுவும் மாவின்
நெட்டிலை வாலும் கொண்டாய்
பலர்புகழ் கின்ற பச்சைப்
பசுங்கிளி வாராய்! வாராய்!

மேலும் கிளியைப்பற்றிக் கூறுகையில் நீலவானைச் சுற்றி இருக்கும் நீண்ட வானவில் போலக் கிளியின் கழுத்தில் உள்ள பொன்வரி இருக்கிறது.

அழகு ஈடுபாடு ஒவ்வொரு கவிஞரிடமும் வெவ்வேறு உருவத்திலும் கருத்துப் புதுமையிலும் புலப்படுகிறது. பாரதிதாசனிடமும் அழகு ஈடுபாடு ஒரு புதுமையாகப் புலப்படுவது உண்மை.

NOT TO BE REPUBLISHED
©KTBS

**நூல்குறிப்பு:** பாவேந்தரின் அழகின்சிரிப்பு -அறிமுகம் என்ற இந்நூலின் ஆசிரியர் முனைவர். பா.கோபாலன் பாட்டினையும் கவிதைச் சிறப்பையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். பழமையைத் தழுவி புதியன படைத்த கவிதை இயல்பை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். இயற்கை அழகினையும் மனிதப் பண்புகளையும் இணைத்துக் கூறியுள்ள தன்மைகள் பாராட்ட வேண்டியன ஆகும்.

**ஆசிரியர் குறிப்பு:** முனைவர் பா. கோபாலன் உடுமலைப் பேட்டை அரசினர் கலைக் கல்லூரியில், தமிழ்ப் பேராசிரியராய்ப் பணிசெய்கிறார். பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், இலக்கிய மதிப்பீடு, தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி எனப்பல நூல்களைப் படைத்துள்ளார்.

**அருஞ்சொற்பொருள்:-**

மருள் - மயக்கம்
கோட்டுப் பூ - மரக்கிளைகளில் தோன்றும் மலர்
இரை - பறவை விலங்குகளின் உணவு
இலவம் - ஒருவித பஞ்சு மரம்,
நெட்டிலை - நீண்ட இலை

## பயிற்சி

I *அ)* **ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. வாழும் இலக்கியங்கள் எதற்குப் பயன்தரும்?
2. கவிஞர், அரிய கருத்துகளை எதன் மூலம் நமக்கு உணர்த்துவர்?
3. மணற் பரப்பு கவிஞருக்கு எவ்வாறு காட்சியளிக்கிறது?
4. கடல் அலைக்கான உவமை யாது?
5. ஆலமரக் கிளையில் தொங்கியிருப்பது யாது?
6. கவிஞர், குழந்தையின் செயலுக்கு உவமையாய் எதனைக் குறிக்கிறார்?

NOT TO BE REPUBLISHED @KTBS

7. மாந்தர்க்கு ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் கற்பிக்கப் பயன் படுத்தும் உவமைப் பொருள் யாது?

8. புறாக்கள் எவ்வாறு அமர்ந்து இரையுண்ணுகின்றன?

9. கிளியின் மேனிக்கான உவமை யாது?

10. கிளியின் கண்ணிற்கான உவமை யாது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை எழுதுக:-**

1. உவமை என்றால் என்ன? விளக்குக

2. மணற் பரப்பின் நிறம்; தன்மை போன்றவற்றுக்கான உவமைகள் யாவை?

3. அலைகளையும் இளைஞரையும் பாரதிதாசன் எவ்வாறு ஒப்பிட்டுக் கூறுகிறார்?

4. அலைகளையும் அன்னக் கூட்டத்தையும் பாரதிதாசன் எவ்வாறு ஒப்பிட்டுக் கூறுகிறார்?

5. ஆலமரத்தில் மந்தியின் செயல்யாது?

6. புறாக்களின் வாழ்வில் மாந்தர்க்கு வேண்டியன யாவை?

7. கிளியின் மேனி, மூக்கு, கண் - இவற்றுக்கான உவமைகள் யாவை?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடைஎழுதுக:-**

1. கடல் பற்றிய கவிஞர் பாரதிதாசனின கருத்தினை விளக்குக?

2. ஆல மரத்தில் மந்தி தாவிக் குதித்த செயல் நகைச் சுவையுடன் கூறப்பட்டுள்ளதை எழுதுக?

3. புறாக்களிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியன யாவை?

4. கிளியின் தோற்றத்தைக் கவிஞர் பாரதிதாசன் எவ்வாறு சிறப்புடன் கற்பனை செய்துள்ளார்?

**II (அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

1. இது கல்விநிலையத்தின் இளைஞர்தம் நெஞ்சம் போல் பூரிப்பால் ஏறும்; விழும், புரண்டு ஓடும்?

© KTBS NOT TO BE REPUBLISHED

2. அக்குரங்கு தன்வாலையே பாம்பு என அச்சத்துடன் கண்டு மருள்கிறது.

3. இப்புறாக்கள் இரையுண்ணும் போது, புறாக்களின் தாமரைப் பூ இதழ் விரிந்திருத்தல் போல இருக்கிறது.

(ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. பாவேந்தர் தமது படைப்பான ____________ ____________ உவமைகளைக் கவினுறக் கையாளுகிறார்.

2. மணற் பரப்பு கீரியின் ____________, _________ போல் கவிஞருக்குக் காட்சியளிக்கிறது.

3. ஆலமரக் கிளையில் ____________ தொங்கியது. அதனை ___________என்று கருதி மந்தி தொட்டது.

4. அக்குரங்கு தன் வாலையே ______________ வென அச்சத்துடன் கண்டு மருள்கிறது.

5. ____________ புறாக்களுக்கு ஒப்புமை ஆகும்.

III. அ) சேர்த்து எழுதுக:

பொருள் + உடன்; பொருத்தம் + உறக்கண்டு

சொல் + சித்திரம்; இரை + உண்ணும் + போது

ஆ) எதிர்ச்சொல் எழுதுக:-

பயன்தரு, செழித்து, ஏறும், விழும், உச்சி,
வட்டம், தொடங்கு

இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக:-

வீசுகின்றன, துள்ளித்துள்ளி; வானவில்

செய்முறை :

இப்பாடத்தில் வரும் இயற்கைக் காட்சிகளை ஓவியமாக படம் வரைக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 2. நீரெனும் அமிழ்து

**கவிச்சுடர் முருகையா**

(சுற்றுப்புறச் சூழல் - என்னும் கருத்து பரவலாக எல்லாரும் உணர்ந்த ஒன்றாக இருக்கிறது. "சுற்றுப்புறத்தைத் தூய்மை யாகவும் மாசுபடாமலும் வைத்துக் கொண்டால் தான் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும்" என்பதை உணர்ந்து கொண்டுள்ளான். அதிலும் சிறப்பாக நீரை மாசுபடாமல் காப்பது என்பது சிறந்த நெறி. ஏனெனில் மனித வாழ்க்கைக்கும் - மனித இயக்கத்திற்கும் நீர் இன்றியமையாதது. உலக இயக்கத்திற்கும் நீர் அவசியம் தேவை. உலகப் பரப்பில் நான்கில் ஒரு பங்கு நிலமும், மூன்று பங்கு நீரும் இருப்பதைக் கொண்டே நீரின் தேவையைப் பற்றி உணர்ந்து கொள்ளலாம்.)

நாம் உயிரினத் தோற்றத்தை அலசி ஆராய்ந்து பார்ப்போமானால் இயற்கையே உயிரினத்தின் தாய் என்பது புலப்படும். உயிரினத் தோற்றம் முதன் முதலில் நீரிலிருந்து தொடங்கியது என்று கூறுவர். நீரைத் தாய் என்று தமிழ்க்கவிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மழை பொழிந்து (நீர் பெருகி) உலகிலுள்ள உயிர்களைக் காத்து வருவதால், அம்மழையே அமிழ்தம் ஆகும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலான்

தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று" - (குறள்)

அதாவது உலகினையும், அதில் வாழும் உயிரினங்களையும் காக்கும் நீரை, அமிழ்தம் என்றுரைக்கின்றார் வள்ளுவர்.

வறுமையினையும் நோயினையும் இல்லையென்றாக்க நீரினால் முடியும் என்று தமிழ் இலக்கியங்கள் பல இடங்களில் தெளிவுபடுத்தி யிருக்கின்றன.

“சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய்நடக் கின்றாள் வையம்
தழைகவே தழைக என்றே!
நோய் தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார்
நூற்றுக்கு நூறு பேரும்
ஓய்வின்றிக் கலப்பை தூக்கி
உழவுப்பண் பாட லானார்
என்று பாரதிதாசன் பாடுகின்றார்.

ஆற்றுத்தாய் நமது சோற்றுக்கு வழி காட்டுபவள் மட்டுமல்ல; ஐம்புலன்களுக்கும் இன்பம் அளிப்பவள் அவளே. ஒருவனது புலன்கள் மகிழ்ச்சியால் பொங்கும்போது மன ஆரோக்கியம் சீராகிறது; அவனது உடல் ஆரோக்கியமும் நேராகிறது.

உலக இயக்கத்திற்கும் உடல் இயக்கத்திற்கும் நீரின் பங்கு மகத்தானது. உலக இயக்கத்திற்கு நீர் இன்றியமையாதது என்பதை,

“நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு - (குறள் - 20)

என்னும் குறள் விளக்குகிறது.

உடல் இயக்கத்திற்கு நீர் அவசியமானது என்பதை,

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையான் காணப் படும் (குறள் - 298)

என்னும் குறள் விளக்குகிறது.

இதே கருத்தை எல்லாம் நீரிலிருந்து உற்பத்தி ஆகிறது. எல்லாம் நீரினால் உய்விக்கப்படும் என்று ஜெர்மானியக்கவிஞர் கோதே கூறியுள்ளார். உலகத்தில் உள்ள பொருள்களுள் மேலானது நீர்என்றுகிரேக்கப்பேறிஞர்தேல்ஸ்மைல்டஸ்லீம்மொழிந்துள்ளார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

மனிதன் பல நாட்கள் உணவில்லாமல் உயிர்வாழ முடியும். ஆனால் நீரில்லாமல் ஒரிரு நாட்கள் கூட இருக்க முடியாது. நீர் இல்லையேல் நிலம் வறண்ட பாலைவனமாகி விடும். பாலை வனத்தில் பயிர்கள் வளராது. பயிர்கள் இல்லையேல் மக்களுடைய பசியைத் தீர்க்கமுடியாது. பசியைத் தீர்க்க இயலவில்லையென்றால் பட்டினியால் உயிரை இழக்க நேரிடும்.

எழுபது கிலோ கிராம் எடையுள்ள ஒரு மனித உடம்பில் ஏறத்தாழ நாற்பத்தாறு கிலோ கிராம் நீர் உள்ளது. இந்த அளவு நீரில் பத்து சதவீதம், அதாவது நான்கரை கிலோ கிராம் நீர் குறைந்தால் கூட உயிருக்கே ஆபத்தாக முடியும். ஒரு சராசரி மனிதன் சாதாரணமாக நாளொன்றுக்கு இரண்டு லிட்டர் நீரைத் தனியாகவோ, பானமாகவோ, உணவுடன் சேர்த்தோ அருந்த வேண்டுமென மருத்துவர்கள் கூறுகின்றனர்.

நோய்க்கு இடம் கொடாமலிருக்க மனிதன் உடம்பைத் தூய்மையாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். “சுத்தம் சுகம்தரும்; சுத்தம் சோறு போடும்’’ என்ற பழமொழிகள் புறந் தூய்மை யின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

மனிதன் என்ன செய்ய வேண்டும்? எப்படி இருக்க வேண்டும் என்பதை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த புறநானூற்று அறிவியல் மேதை, உடம்பையும், உயிரையும் பாதுகாப்பது பற்றி மிக அழகாகக் கூறியுள்ளார். தண்ணீர் இன்றி இவ்வுடம்பு இயங்காது. இந்த உடம்பிற்கு உணவை உற்பத்தி செய்து கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் ஆவர். உணவு என்பது நிலத்தில் விளைகின்ற தாவர உணவுகளும் நீருமே ஆகும். எனவே, நிலத்தையும் நீரையும் பாதுகாத்தவர் உடம்பையும், உயிரையும் பாதுகாத்தவர் ஆவர் என்பதே. இதைத் தெளிவாக விளக்கும் புறநானூற்றுப் பாடல் இதோ.

@KTBS NOT TO BE REPUBLISHED

*நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்:*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே!*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே (புறம் 18-23)*

மேற்கண்ட பாடல் உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே, என்று அழுத்திக் கூறுகிறது. உணவு என்றால் நிலத்தில் விளைகின்ற தாவர உணவு வகைளையும் நீரையும் குறிக்கும்.

"உடல் இயக்கத்திற்கு இன்றியமையாததாகிய நீரைச்

செல்வம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகு அவாம்
பேரறி வாளன் திரு" (குறள் - 215)

என்னும் குறள் மூலம் அறியலாம். உலக நடையினை அறிந்து நடக்கின்ற பேரறிஞனுடைய செல்வமானது, ஊரின் நடுவே உள்ள குளம் நீர் நிறைந்தது போன்றதாகும்.

நமக்குத் தேவையான அளவு நீரை அருந்தாவிடில் பலவித நோய்கள் வந்து சேரும் செரித்தல் சரிவர நடைபெறாது. எனவே நீரினை, உணவு உண்ட பின் அருந்துதல் வேண்டும் என்பதனைச் சதகம்,

"- - - - - - - - - - - - - - - - - நீர்
சாதகத்தில் எவ்வளவு ஆனாலும் புகுத்தபின்
தாகத் தனக்கு வாங்கல்"

என்று சுட்டு கின்றது.

**ஆசிரியர் குறிப்பு:** இக்கட்டுரையாசிரியர் திரு. கவிச்சுடர் முருகையா என்பவர். இவர் காவல் துறையில் பெரிய பதவியில் இருப்பவர். கரடுமுரடான காவல் துறை வாழ்க்கைக்கு இடையே

NOT TO BE REPUBLISHED @KTRS

இளகிய இலக்கிய நெஞ்சத்தைத் தொலைத்து விடாமல் இலக்கியங்களில் மூழ்கி இலக்கியம் படைத்தும் வருகின்றார். இவர் ஒரு சிறந்த கவிஞர்; சிறுகதை ஆசிரியர்; கட்டுரையாசிரியர். இக்கட்டுரை இவரது "**தமிழ் இலக்கியத்தில் மருத்துவம்**" என்ற கட்டுரைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

***அருஞ்சொற் பொருள்:*** சேய் - குழந்தை; வையகம் - உலகம்; தழைக - வளமாகுக; வறுமை - ஏழ்மை; ஐம்புலன்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி; வான் - வானம்; அகம் - உள்ளம்; வாய்மை - உண்மை; உய்விக்கப்படும் - வாழ்விக்கப்படும்; பாலைவனம் - வறட்சியான நிலப்பகுதி; இயலவில்லை - முடியவில்லை; யாக்கை - உடம்பு; உண்டி - உணவு.

**பயிற்சி**

**I *அ)* ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. உயிரினத்தின் தாய் எது?
2. வள்ளுவர் மழையை எப்பெயரால் அழைத்தார்?
3. மனிதனுக்கு மன ஆரோக்கியம் எப்பொழுது சீராகும்?
4. ஒரு மனிதன் நாளொன்றுக்கு எவ்வளவு தண்ணீர் அருந்த வேண்டும்?
5. 'யாவற்றினும் மேலானது நீர்' என்று கூறிய அறிஞர் யார்?

***ஆ)* மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. உயிரினத் தோற்றத்தை ஆராய்ந்து கண்ட உண்மை என்ன?
2. வள்ளுவர் மழையை அமிழ்தம் என்று சொல்லக் காரணம் என்ன?
3. நீரைப் பற்றி ஜெர்மானியக் கவிஞர் கோதே கூறியுள்ள கருத்து யாது?

©KTBS NOT TO BE REPUBLISHED

4. பேரறிவாளன் செல்வம் எதற்கு ஒப்பானது?

5. நீரின் இன்றியமையாமை பற்றிச் சதகம் கூறுவது என்ன?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. பாரதிதாசன் நீரைப் பற்றிக் கூறியுள்ளவை யாவை?

2. நீரின் இன்றியமையாமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

3. தூய்மை பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

4. மனிதன் என்ன செய்ய வேண்டும்? எப்படி இருக்க வேண்டும் என்று புறநானூறு கூறுகிறது?

**II இடம் சுட்டிப் பொருள் விளக்குக:-**

1. "நீர் இல்லையேல் நிலம் வறண்ட பாலைவனமாகி விடும்"

2. "சுத்தம் சுகம் தரும்; சுத்தம் சோறு போடும்"

3. உணவு என்றால் நிலத்தில் விளைகின்ற தாவர உணவுகளையும் நீரையும் குறிக்கும்.

**செய்முறை :**

1. நீரின் இன்றியமையாமை குறித்து கலந்துரையாடல் செய்க.

2. நீர் மாசுபடுதல் குறித்து ஒருநாடகம் நடித்துப் பழகுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

R5F5E6

# 3.வல்லவனுக்கு வல்லவன்

**எஸ். மெய்யப்பன். எம்.ஏ.**

(வல்லவனுக்கு வல்லவன் உலகத்தில் உண்டு என்ற பொன்மொழியை நினைவுபடுத்தும் சிறுகதை இது. ஏதாவது ஒரு நிகழ்வு, ஒருநாள் நிகழ்வு, சில பலநாள் நிகழ்வு, வாழ்வின் ஒரு பகுதி ஆகியவற்றை மையமாகக் கொண்டு, ஏதாவதொரு கருத்தை வெளிப்படுத்துவது சிறுகதை. அளவிலும் சிறியதாக இருக்கும். ஒருவன் தன்னைவிடச் சிறந்த ஓவியன் இல்லை என்ற ஆணவம் பிடித்து மற்றவர்களை அடிமைப்படுத்தினான். அவனை அரசன் புத்திசாலித் தனமாக மடக்கி அவன் ஆணவத்தை அடக்கினான். தான் என்ற மமதை தன்னையே அழித்துவிடும் என்பதை இக்கதை காட்டுகிறது.)

**அவன் ஓர் ஓவியன்!**

ஓவியனென்றால் அப்படி இப்படிச் சாதாரண ஓவியன் அல்லன்; அகிலமே கண்டு அதிசயிக்கத் தக்க ஓவியன்! அது மட்டுமல்ல; அகிலத்தையே அடிமையாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்ட ஓவியன்!

ஊர் ஊராக, நாடு நாடாகச் சுற்றி வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டு வந்த அவன் கடைசியாகக் காஞ்சி மாநகருக்கு வந்து சேர்ந்தான். பெரிய மாளிகை ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான். வண்ணக் கலவை குழைப்பது, தூரிகை எடுத்துக் கொடுப்பது போன்ற ஒவ்வோர் வேலைக்கும் ஒவ்வோர் அடிமை. அடிமை என்றால் பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டவர்களல்ல; ஓவியப் போட்டியில் தோற்றதால் அடிமைகளானவர்கள்.

தோற்றவன் அடிமையாகும் அளவுக்கு அப்படி ஓர் ஓவியப் போட்டியா? ஆமாம் போட்டி விதி அப்படித்தான்!

போட்டிக்கு முன்பு ஓர் ஒப்பந்தப் பத்திரம் தயாராகும். அதில் முக்கிய ஒப்பந்தம் போட்டியில் தோற்றவர் வென்றவர்க்கு ஆயுள்

©KTBS NOT TO BE REPUBLISHED

முழுவதும் அடிமை. இதில் போட்டியாளர்கள் இருவரும் கையெழுத்துப் போடுவார்கள். பிறகுதான் போட்டி ஆரம்பமாகும்.

இவ்விதம் தோல்வியுற்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெரிய பெரிய பிரபுக்கள் தாம் அந்த ஓவியனின் மாளிகையில் அடிமைகளாகப் பணி புரிந்தார்கள்.

காஞ்சி மாநகரின் அங்காடித் தெருவில் நின்றுகொண்டு வருவோர் போவோரை எல்லாம், ''போட்டிக்கு வாரீரோ?'' என்று சவால் விட்டு அழைத்தான் ஓவியன். பரம்பரை பரம்பரையாக ஓவியத்திற்குப் பேர் போன காஞ்சி மாநகரில் சவாலை ஏற்றுக்கொள்ளத்தானா ஓவியர்களில்லை?

பல ஓவியர்கள் போட்டியில் கலந்து கொண்டார்கள். ஆனால் முடிவு? காஞ்சி மாநகரில் புகழ் வாய்ந்த ஓவியர் கூட்டமே கொஞ்ச நாட்களில், அந்த ஓவியன் மாளிகையில் அடிமை வேலை செய்ய ஆரம்பித்தது.

அடிமைகளாகிவிட்ட இந்த ஓவியர்களின் மனைவிமார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து யோசித்தார்கள். ஒரு முடிவுக்கும் வர இயலாதவர்களாய்க் கடைசியில், அப்போது தான் தல யாத்திரைக்குச் சென்று திரும்பியிருந்த பல்லவ மன்னரிடம் சென்று முறையிட்டார்கள். தங்களுக்கு மாங்கல்யப் பிச்சை அளிக்க வேண்டுமென்று மன்றாடினார்கள்.

விவரமறிந்த மன்னர் திகைத்துப் போனவராய் ஓவியனை அழைத்து வரச் செய்து, ''மனிதனை மனிதன் அடிமையாக்குவது அநாகரிகச் செயல். அதனால் அடிமையாக இருக்கும் ஓவியர்களையெல்லாம் விடுதலை செய்து விடும். நீர் வேண்டும் பொருள் தருகிறேன்!'' என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார். ஆனால் ஓவியன் அதற்கு ஒப்புக் கொள்ளவே இல்லை. அவனது பிடிவாதத்தை மாற்ற முடியாதென்பதைப் புரிந்து கொண்ட மன்னர், கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவராய், ''சரி, நாளை ஓவியப் போட்டிக்கு ஏற்பாடு செய்யும்!'' என்று ஓவியனிடம் சொன்னார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

மகிழ்ச்சியடைந்த ஓவியன் போட்டியில் கலந்து கொள்ளப் போவது யாரென்று கேட்டான். அதற்கு மன்னர், நான் தான்! என்று பதில் சொன்னார்.

ஓவியன் அதிர்ந்து போய் போட்டி விதியை நினைவு படுத்தினான். நாளைய போட்டியில் தோற்றால் நான் உமக்கு அடிமை! என்று மன்னரிடமிருந்து பளிச் சென்று பதில் வந்தது!

அடுத்த நாள் ஓவிய மண்டபத்தில் ஜேஜே என்று கூட்டம். கூடியிருந்தவர்களிடத்தில் ஒருவித அச்சம் பரவி இருக்கத்தான் செய்தது.மன்னர் தோற்றுவிட்டால்---?காஞ்சிமாநகர மக்களால் இதைக் கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை!

ஓவிய மேடையின் இடது புறத்தில் ஓவியன் நின்று கொண்டிருந் தான். அவனுக்கு அருகில் போட்டிக்குரிய அவனது ஓவியம் அழகான பட்டுத் திரையால் மறைக்கப் பட்டிருந்தது; வலது புறத்தில் மன்னர் நின்று கொண்டிருந்தார்; அருகில் போட்டிக்குரிய அவரது ஓவியம் அழகான பட்டுத் திரையால் மறைக்கப் பட்டிருந்தது.

போட்டியைத் துவக்கலாமே? முதலில் உமது ஓவியத்தைப் பார்க்கலாம், என்றார் மன்னர். ஓவியன் சரேலென்று பட்டுத் திரையை விலக்கினான். அடடா! உலகத்திலுள்ள அத்தனை கனி வகைகளும் கண்ணைப் பறிக்கும் வகையில் வண்ணக் கலவையில் அழகாக வரையப்பெற்றிருந்தன. இதுஎன்ன அதிசயம்! கிளிகளும் மற்றப் பறவைகளும் பறந்துவந்தன!

ஓவியத்திலிருந்த கனிகளைக் கொத்தத் தொடங்கின! ஆமாம்! ஓவியம் அந்த அளவுக்கு உயிருள்ளதாக இருந்தது. இந்த அதிசயத்தை ஆமோதித்து முதல் கையொலி மன்னரிடமிருந்தே எழுந்தது; தொடர்ந்து கூடியிருந்தவர்களின் கையொலி மண்டபத்தையே அதிரச் செய்தது.



NOT TO BE REPUBLISHED

இதன் பிறகு மண்டபத்தில் அமைதிநிலவியது! மன்னரின் ஓவியத்தைப் பார்க்கலாமா! என்றான் ஓவியன் ஓ.........தாராளமாக ........... நீரே பாரும்! என்றார் மன்னர்.



ஓவியன் உடனே விரைந்து சென்று, மன்னரின் ஓவியத்தை மூடியிருந்த பட்டுத் திரையில் கை வைத்துத் தள்ளினான். இதென்ன விந்தை! திரை விலகவில்லையே!

திரைவிலகவில்லையே! என்றான் ஓவியன் ஒன்றும் புரியாதவனாய்.

" எப்படி விலகும், ஓவியரே ! பட்டுத் திரை தான் என் ஓவியம்!" என்று மன்னரிடமிருந்து அம்பு போலப் பதில் வந்தது.

ஒரு கணம் திகைத்த ஓவியன் மறுகணம் நெடுஞ்சாண் - கிடையாக அரசரின் கால்களில் விழுந்தான்.

"அரசே! என் கனி வகை ஓவியம், நாலறிவு படைத்த பறவைகளைத் தான் ஏமாற்ற முடிந்தது! ஆனால் தங்களின் தனிவகை ஓவியம் ஆறறிவு படைத்த, ஓவியனான என்னையே ஏமாற்றி விட்டதே! வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதைப் புரிந்து கொண்டேன் அரசே!" என்று கண்ணீர் விட்டு அழுதான்.

**ஆசிரியர் குறிப்பு :** வல்லனுக்கு வல்லவன் என்ற சிறு கதையை எழுதியவர் திரு.எஸ். மெய்யப்பன் எம்.ஏ. அவர்கள் ஆவர். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர் வரிசையில் தலை நிமிர்ந்து நிற்கும் சிறந்த எழுத்தாளர். இச்சிறுகதை, புத்திக்கு வேலை தரும் புதுமைச் சிறு கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டு உள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

**அருஞ்சொற் பொருள் :** அகிலம்-உலகம் ; கங்கணம் - ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு அடையாளமாகக் கையில் கட்டிக்கொள்ளும் கயிறு முடிவு; பிரபு -செல்வந்தர்; அங்காடித் தெரு - கடைத்தெரு; மன்றாடினார் - வேண்டினார்; கிலி - அச்சம்; கனி - பழம்; தத்ரூபமாக - உண்மை வடிவமாக; திகைத்த - வியந்த; நெடுஞ்சாண்கிடை - உடல் முழுவதும் தரையில் படும்படி விழுந்து வணங்குதல்.

## பயிற்சி

©KTBS NOT TO BE REPUBLISHED

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. ஓவியனின் மாளிகையில் பணி செய்த அடிமைகள் யாவர்?
2. போட்டியின் முக்கிய அம்சம் (உள்ளடக்கம்) என்ன?
3. ஓவியன் எதை ஓவியமாக வரைந்தான்?
4. அரசர் வரைந்த ஓவியம் எது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. ஓவியன் எப்படிப்பட்டவன்?
2. ஊர் ஊராகச் சென்ற ஓவியன் என்ன செய்து வந்தான்?
3. ஓவியப் போட்டியின் விதி என்ன?
4. மன்னன் ஓவியனிடம் எடுத்துக் கூறியது என்ன?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:**

1. ஓவியன் எவ்வாறு போட்டியிட்டவர்களை அடிமைப் படுத்தினான்?
2. ஓவியனின் கர்வம் அடங்கியது எவ்வாறு?

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

*1. "மனிதனை மனிதன் அடிமையாக்குவது அநாகரிகச் செயல்"*

*2. "நாளை ஓவியப் போட்டிக்கு ஏற்பாடு செய்யும்"*

*3. "நாளைய போட்டியில் தோற்றால், நான் உமக்கு அடிமை"*

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

*1. ஓவியன் கடைசியாக வந்து சேர்ந்த ஊர் ______________*

*2. காஞ்சி மாநகரம் ________________ பேர் போன நகரம்.*

*3. ஓவியனோடு இறுதியாகப் போட்டியில் கலந்து கொண்டவர் ________________*

*4. பறவைகள் ________________ அறிவு கொண்டவை.*

**III அ) கீழ்வரும் சொற்களையும், சொற்றொடர்களையும் தொடரில் அமைத்து எழுதுக:-**

*1. வெற்றிக் கொடி; போட்டி; வெற்றி; சவால் விட்டு; திகைத்து; அநாகரிகச் செயல்; அதிர்ந்து போய்; அதிரச் செய்து.*

*ஆ) எடுத்துக் காட்டைப் போல் கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடரைத் தொடரில் அமைத்து எழுதுக:-*

*(எ-டு) ஊர் ஊராக :*

*நாடோடிகள் ஊர் ஊராகச் சுற்றித்திரிவர்*

*நாடு நாடாக; வீடுவீடாக; காலம் காலமாக; பரம்பரை பரம்பரையாக*

@KTBS NOT TO BE REPUBLISHED

**படித்து மகிழ்க:-**

"அகிலமே கண்டு அதிசயிக்கத் தக்க ஓவியன்"

" போட்டிக்கு வாரீரோ"

"மாங்கல்யப் பிச்சை அளிக்க வேண்டும்"

"மனிதனை மனிதன் அடிமையாக்குவது அநாகரிகச் செயல்"

''வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.''

**அறிந்து கொள்க:-**

அருகில் உள்ள நூல் நிலையத்திற்குச் சென்று சிறுகதைகள் உள்ள நூல்களை எடுத்துப் படித்து சிறுகதைள் பற்றி அறிந்து கொள்க.

**செய்முறை :**

இப்பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 4. அயல் மண்ணின் அற்புதங்கள்

H6N3M1

**முனைவர். அ.சங்கரி**

(இயற்கையே ஓர் அற்புதம். அதனைப் பாதுகாக்கும் முறையோ ஒரு சாதனை. மலைகள், வயல்கள், பாலைவனங்கள், கடல், அருவிகள், பனிப்பாறைகள், அடர்காடுகள், சோலைகள், பறவைகள், விலங்குகள், மீன்கள், கடல் ஆமைகள், மலர்கள், வண்டுகள் ஆகிய இயற்கை அழகு ததும்ப நூலகம், திரையரங்கு, குட்டி ரயில், பேருந்துகள் பல்வேறு விதமான கார்கள் போன்ற செயற்கை வசதிகளுடன் இலங்கும் அமெரிக்காவில் இயற்கையை அழிக்காமல், சுற்றுப்புறச் சூழலைத் திறம்படக் காத்துவரும் அமெரிக்கவாழ் மக்களின் திறனை வியந்ததன் விளைவே இக்கட்டுரை மிளிர்ந்தது. இதனைக் கற்கும் இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் இயற்கை வளத்ததைப் பேணிக் காத்திடவேண்டும் என்பதே நோக்கமாகும்.)

©KTBS NOT TO BE REPUBLISHED

அமெரிக்காவின் அற்புத நகரம் நியூயார்க். இந்நகரம் நாகரிகப் பொலிவு (**Fashion Design**) மிகுந்தது. இங்குள்ள அடுக்குமாடிக் கட்டிடங்களின் தோற்றம் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வணிக மையமாகக் கருதப்படும். இந்நகரைச் செழிக்கச் செய்வதற்கு ஹட்சன் ஆறும் (**Hutson River**) ஒரு பெருங்காரணமாகும்.

ஹட்சன் ஆற்றின் கப்பல் போக்குவரத்து நகரின் தேவைக்கு ஏற்றாற்போல் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறவும் விசைப் படகுகள் ஆற்றைக் கடக்கவும் பயன்படுகின்றன. இவ்வாற்றில் பொழுது போக்கிற்கான சொகுசுப் படகுகள் ஓயாமல் காட்சியளிக்கும்.

அமெரிக்காவின் மற்றொரு முக்கிய மாநிலம் கலிபோர்னியா. கலிபோர்னியாவின் சிறப்பு மிக்க நகரம் சான்பிரான்சிஸ் கோ

(San francisco) இந்நகரம் அமெரிக்க நாட்டின் சிலிகான் பள்ளத்தாக்கு (Silicon valley of America)என அழைக்கப் படுகிறது.

சான்பிரான்சிஸ்கோ நகரில் பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்பவர்களில் ஐம்பது விழுக்காடு மக்கள் இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின்று வந்தவர். இவர்கள் பெரும்பாலும் மென்பொறியாளர்கள் இவர்களுள் அதிகமானோர் இந்தியர்கள் தான். குறிப்பாக தென்னிந்தியர்கள் எனினும் நம் நாட்டு அறிவுக் களஞ்சியங்களாம் பொறியியல் வல்லுநர்கள். அயல் மண்ணில் வேலைபார்த்து வருகிறார்களே என்னும் ஏக்கம் மின்னல் கீற்றெனத் தோன்றியது.

மறுநாள் காலை யோசிமிட்டி பள்ளத்தாக்கிற்குப் புறப்பட்டோம். செல்லும் வழியெங்கும் இருமருங்கும் பச்சைக் கம்பளம் போர்த்தியது போன்று பிளம்ஸ் மற்றும் சொரிபழத் தோட்டங்கள் கண்ணைக் கவர்ந்தன. சாலையோரங்களிலும் மற்ற இடங்களிலும் மரங்கள் போற்றிக் காக்கப்படுவதைக் கவனித்தோம். மரத்தைச் சுற்றிலும் சிறியதாய்ச் சுவர்கட்டி உரம்போட்டு அதன்மீது மரச்சக்கைகள், தச்சுக்கழிவுகள் (மரத்தூள்) போடப்பட்டுள்ளன. நிலத்தடி நீரை உலராது பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் மரத்தூளிற்கு இருப்பதால் இவ்வாறு போட்டு மரங்களை உலராது பாதுகாக்கும் தன்மை போற்றுதற்குரியதன்றோ!

செல்லும் வழியெங்கும் இயற்கைப் பேரழகைக் கண்டுகளித்திடச் செயற்கையாக இருக்கைகான அமைத்துள்ளனர் முதலில் கண்ணில் பட்டது யோசிமிட்டி அருவி ஏறக்குறைய 2245 அடி உயரத்தினின்று கிரானைட் பாறை வழியாக பாய்கிறது. மலை அடிவாரத்தின்று தலையை உயர்த்திப்பார்க்க. வானத்தினின்று பொத்துக் கொண்டு

© KTBS
NOT TO BE REPUBLISHED

வெள்ளை நிற நீர்கொட்டுவது போலத் தோன்றியது. அது கீழே பாய்ந்து பெரிய மெர்ச்டு (Merced) ஆறாக ஓடுகின்றது. அங்கிருந்து சற்று பயணித்தால் ரிப்பன் அருவி தெரியும். இது செங்குத்தாக 1612 அடி உயரத்தினின்று பாய்ந்து அந்த ஆற்றோடு சேர்ந்து ஓடுகிறது. அது பாயும் ஓசையும் ஆறாகப் பெருக்கெடுக்கும் சலசலப்பும் நெஞ்சை அள்ளும் காட்சியாகும். இவ்வாற்றுப் படுகையிலிருந்து 12 மைல் தூரம் மிதிவண்டியில் பயணிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கர் உடற்பயிற்சி செய்ய குடும்பம் குடும்பமாக மிதிவண்டிகளில் தலைக்கவசம் அணிந்தபடி ஓட்டி மகிழ்வதைக் காணலாம்.

மலையின் மேற்பகுதிக்கு ஏறக்குறைய 11000 அடி வரைக்கும் செல்லும் போது உள்ளம் மகிழ்ச்சியுறினும் அச்சம் இடையிடையே தலை காட்டுகிறது. மலையுச்சிக்குச் சென்றதும் ‘வெள்ளிப் பனிமலையின் மீதுலாவு வோம்’ எனும் பாரதியின் கற்பனை நனவான எண்ணம் உதித்தது. அங்கு பனிப்பாறைகளின் பனிப்பாறை மையம் எனப்படும். இங்கிருந்து பார்க்குமிடம் எங்கும் மரங்களிடையே பனிப்பாறைகள் தென்பட்டன. ஓரிடத்தில் அருகே சென்று தொட்டுப் பார்த்த போது நுரைக்குள் ஆழ்ந்து போவது போல் விரல்கள் உள்ளே குளிர்ச்சியோடு சென்றன. இந்தப் பனிப்பாறைகளில் பாலிசேடு பாறை மிகப் பெரியது. ஆல்பைன் பனிப்பாறைகள் மெர்சிகு பனிப்பாறைகள் போன்று பல உள்ளன. இதனை ஆண்டுதோறும் 3.7 மில்லியன் மக்கள் கண்டு மகிழ்ந்து செல்கின்றனர்.

இந்த பள்ளத்தாக்கில் செல்லும் வழி நெடுகிலும் அடர்காடுகள் பரவியுள்ளன. அவற்றிடையே கரடிகள் முதலான 200 வகை விலங்குகள், ஏறக்குறைய 700 வகை பறவையினங்கள் நூற்றுக்கணக்கான செடிவகைகள் மலர் வகைகள், மரவகைகள் ‘எனக் காண்போரை மெய்சிலிர்க்க வைப்பவைாய் அமைந்துள்ளன.

© TBS NOT TO BE REPUBLISHED

ஒட்டகத்திற்கு நீரைத்தேக்கி வைக்கும் 'பை' இருப்பது போல நமக்கும் தூய காற்றைத் தேக்கி வைக்கும் வசதி இருந்தால் எப்படி இருக்கும் எனச் சிந்திக்க வைத்த நினைவுகளுடன் அமெரிக்க மண்ணின் பெருமையை எண்ணி வியந்து மனங்குளிரத் திரும்பினோம்.

**அருஞ்சொற் பொருள்:**

பொலிவு - செழிப்பு, அழகு; உறைவிடம் - தங்குமிடம்.

## பயிற்சி

I **அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. நாகரிகப் பொலிவிற்குத் தலைசிறந்த நகரம் யாது?
2. நியூயார்க் நகரைச் செழிக்கச் செய்யும் ஆற்றின் பெயர் என்ன?
3. ஹட்சன் ஆற்றின் பயன்களுள் ஒன்றை எழுதுக?
4. சான்பிரான்சிசுகோ நகரில் வாழ்பவர்களில் பெரும்பாலோர் யாவர்?
5. யோசிமிட்டி அருவி எவ்வாறு பாய்கிறது?
6. மகிழ்ச்சியும் அச்சமும் எப்போது தலைகாட்டியது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. நியூயார்க் நகருக்கும் ஆற்றுக்கும் உள்ள தொடர்புகளை எழுதுக.
2. கலிபோர்னியா நகரின் சிறப்பு யாது?
3. மெர்சிடா ஆற்றுப் படுகையிலிருந்து 12 மைல் தூரம் வரை செய்யப்பட்டுள்ள வசதி யாது?
4. பாரதியார் பாடல்வரி நினைவு வந்ததற்கான காரணத்தைக் கூறுக?

NOT TO BE REPUBLISHED @KTBS

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:-**

1. ஹட்சன் ஆற்றை அமெரிக்கர் எவ்வாறெல்லாம் பயன்படுத்தியுள்ளனர்?
2. பனிப்பாறைப் பகுதியைப் பற்றிய சிறப்புகளை எழுதுக.
5. யோசிமிட்டிப் பள்ளத் தாக்கில் வாழும் உயிரினங்கள் பற்றிய குறிப்புக்களை எழுதுக.

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக:-**

1. ''மரங்களை உலராது பாதுகாக்கும் தன்மை போற்றுதற் குரியதன்றோ!''
2. 'முதலில் கண்ணில் பட்டது யோசிமிட்டி அருவி'.
3. 'வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்'.

**III அ) சேர்த்து எழுதுக:**

இங்கு + உள்ளன; தேவைக்கு + ஏற்றால்; முழுமை + பயன்;

**ஆ) பிரித்து எழுதுக:**

விசைப் படகுகள்; ஆங்காங்கே; தோற்றமளித்தன.

**இ) சொற்றொடரில் அமைத்தெழுதுக.**

தேவைக்கேற்றாற் போல்; காட்சியளித்தன; போற்றிக் காக்க.

**ஈ) கோடிட்ட இடங்களை நிறைவு செய்க:-**

1. வணிக மையமாகக் கருதப்படும் இந்நகரைச் செழிக்கச் செய்வதற்கு ______ ______ ஒரு பெருங்காரணமாகும்.
2. யோசிமிட்டி அருவி ஏறக்குறைய ____________ அடி உயரத்தினின்று கிரானைட் பாறை வழியாகப் பாய்கிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

**அறிந்து கொள்க:** பயண அனுபவங்கள் பற்றிய தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், பயணம் செல்ல வேண்டிய இடங்கள் பற்றிய செய்திகளை நாளிதழ்களில் பார்க்கவும்.

**ஆசிரியர் குறிப்பு:** இக்கட்டுரை ஆசிரியர் முனைவர் அ.சங்கரி பெங்களூரிலுள்ள மகாராணியார் கலை மற்றும் வாணிகம், நிர்வாகவியல் கல்லூரியில் தமிழ்த் துறைப்பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்றவர். பெரிய புராணத்தில் உவமைகள், வாரிசு, விதி, இலக்கியச்சங்கமம், நாயன்மார் கதைகள்-பெரியபுராணமும் ஹரிஹரன ரஹளெகளும் என்றவாறாக சிறுகதை, இலக்கியத் திறனாய்வு, ஒப்பிலக்கிய ஆய்வுத் துறைகளில் நூல்களை இயற்றினார். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் வீரப்பமொயிலி இயற்றிய இராமாயண மகா அன்வேசனம் தொகுதி - 5 என்னும் நூலை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். சங்க இலக்கியங்களைத் தமிழிலிருந்து கன்னடத்திற்கு மொழியாக்கம் செய்து வருகிறார்.

**செய்முறை :**

நீங்கள் கண்டு களித்த சுற்றுலா குறித்து ஒரு கட்டுரை வரைக.



© KTBS NOT TO BE REPUBLISHED

## 5. நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம்

A8C6A5

**டாக்டர் . சு. சண்முகசுந்தரம்**

(நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும், நம்பிக்கைகளையும் பற்றி அறிந்து கொள்ளும் இயலே நாட்டுப்புற இயலாகும். நாட்டுப்புறம் என்பது கிராமியப் பகுதிகளையே குறிக்கும். கிராமப்புறக்கலை - இலக்கியங்கள், விளையாட்டு, நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் போன்றவற்றைப் பற்றி அறியும் நாட்டுப்புற இயல் என்ற சொல்லும் தற்போதுதான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் நாட்டுப்புற இயலை "Folklore" என்று அழைக்கின்றனர். நாட்டுப்புற இயலின் வகைகள் பற்றி இப்பாடத்தில் தெரிந்து கொள்ளலாம்).

"நாட்டுப்புற இயலானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும். நாட்டுப்புற இயலின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பரவியுள்ளன. நாட்டுப்புற இயல் அறிவு - என்பது மனித அறிவின் கிளையாகும். அறிவியல் அடிப்படையில் தொகுப்பதும் வகுப்பதும் கற்பதும்தான் நாட்டுப்புற இயலின் கூறுகளாகும். காலந்தோறும் மனித வாழ்வையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதாகும் என்று நாட்டுப்புறவியல் குறித்து ஔரலியா எம். எஸ்பினோசா (Aurelio M. Expinosa) கூறுகிறார்.

**நாட்டுப்புற இயலின் வகைகள் :** நாட்டுப்புற இயலின் வகைகளாகப் பதினைந்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

NOT TO BE REPUBLISHED © KTBS

அவையாவன : 1. பாடல்கள், 2. கதைகள், 3. ஆடல்கள், 4. கூத்துகள், 5. பழமொழிகள், 6. விடுகதைகள், 7. கதைப்பாடல்கள், 8.விளையாட்டுகள், 9. நம்பிக்கைகள், 10. பழக்க வழக்கங்கள், 11. தேவதைகள், 12. கைவினைக்கலைகள், 13. நடைஉடை பாவனைகள், 14. சடங்குகள், 15. புராண இதிகாசங்கள் ஆகியன. இவற்றுள் இன்றியாமையாதவற்றை இங்கு காணலாம்.

**நாட்டுப்புறப் பாடல்கள்:** இவை கிராம மக்களால் கிராம மக்களுக்கு, கிராமங்களிலேயே பாடப்படுபவை. "நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை - பகட்டில்லாதவை - தூய்மையானவை - பொய்க்கலப்பற்றவை நேரானவை. இனிமையும், இசைப் பொலிவும் நிறைந்தவை. தீங்கற்ற கலைக் கருவூலங்கள் " என்பார் திரு. அன்னகாமு. இவை இன்பத்திலும், துன்பத்திலும் பாடப்படும். நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கியப் பாடல்களைப் போன்று ஈடு இணையற்று விளங்கிடினும் இவற்றுக்குள் போலிகளும் புனைவுகளும் இல்லை. பிறக்கும் போது தாலாட்டு தொடங்கி, இறக்கும் போது ஒப்பாரி வரை கிராமிய மக்கள் வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் பாடல்கள் இடம் பெறுகின்றன.

*" ஆராரோ! ஆரிரரோ - என் கண்ணே!*
*ஆராரோ !ஆரிரரோ*
*சீராரும் எங்கள்குல - என் கண்ணே!*
*சிறுமணியே ! கண்ணுறங்கு!*
*அடித்தாரைச் சொல்லியழு ! - என் கண்ணே!*
*அபராதம் வாங்கிடுவோம்!*
*மாமன் அடிச்சாரோ? - என் கண்ணே!*

NOT TO BE REPUBLISHED @KTBS

*மல்லியப்பூச் செண்டாலே!*

*அத்தை அடிச்சாளோ ? - என் கண்ணே!*

*அரளிப்பூச் செண்டாலே!*

என்பது தாலாட்டுப் பாடலின் ஒரு பகுதியாகும்.

*" கானகக் கரிசலிலே! களையெடுக்கும் பெண்மயிலே!*

*நீலக் கருங்குயிலே ! தங்கமே தங்கம்! - நான்*

*நிக்கட்டுமா? போகட்டுமா? சொல்லடி தங்கம் "*

போன்ற பாடல்கள் கல்லாருக்கு மட்டுமன்றிக் கற்றவர்க்கும் இன்பம் பயப்பன - இனிமை பயப்பன. நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், விளையாட்டுப்பாடல்கள்,வாழ்த்துப்பாடல்கள்,கதைப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் என்று வகைப்படுத்தலாம்.

**நாட்டுப்புற ஆடல்கள்**

மனிதனின் மனத்தில் மகிழ்ச்சி நிறைந்து விட்டால் அவன் மேனியும் துள்ளிக் குதிக்கத் தொடங்கும். சில நேரங்களில் சோம்பலையும், சோர்வையும் உதறிவிட்டு, உற்சாகமும், உவகையும் பெற வேண்டும் என்பதற்காகவும் அவன் ஆட விரும்புகிறான். இவ்வாறு ஆடல், உடலுக்குத் தேவையான ஒரு பயிற்சியாகத் தொடக்கக் காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். பின்பு அதுவே பொழுதுபோக்குக் கலையாக உருப் பெற்றிருக்க வேண்டும். காவடி, கரகம், ஒயிலாட்டம், மயிலாட்டாம், பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம் போன்றவை நாட்டுப்புற ஆடல்கள் ஆகும்.

*" தஞ்சாவூரு உருமி மேளம்!*
*தாளங்கட்டிப் பாடி வரும்!*
*கும்பகோணம் பொன் கரகம்*
*குஞ்சம் வச்சி ஆடி வரும்! "*

©KTBS Not to be republished

என்று தொடரும் கரகாட்டப்பாடல், ஆடலுக்குத் தகுந்தாற் போல் இருப்பதைக் காணலாம்.

**கூத்துகள் :** ஆடல்கள், பொதுவாகப் பாடல் கலந்ததாகவே அமைவன. ஆடலும், பாடலும் இணைந்தால்தான் அழகுக்கும், ஆனந்தத்திற்கும் வழி கிடைக்கும். கதையோடு சேர்ந்த ஆடல் கூத்தாகிறது. கூத்தின் வளர்ச்சி நாடகமாகிறது. கூத்துகள் திறந்த வெளிகளில் மேடையின்றி, திரைகளின்றி, அதிக ஒப்பனைகளின்றி நடத்தப்படுவன. திருவிழாக் காலங்களிலும், சிறப்புச் சடங்குகளிலும் கூத்துகள் நிகழ்த்தப்படுகின்றன. பாவைக் கூத்து, தெருக்கூத்து, வில்லுப் பாட்டு போன்றவை கூத்தின் வகைகளாகும்.

**பழமொழிகள்:** பழமையான மொழிகளே பழமொழிகள் ஆகும். கிராமத்து மக்கள் யாருக்காவது அறிவுரை சொன்னாலும், யாரையாவது அன்புடன் திருத்த முயன்றாலும் எதையாவது ஒப்பிட்டுப் பேசினாலும் பழமொழிகளைச் சரமாரியாகப் பயன்படுத்துகின்றனர். பேச்சு வைரங்களுக்கு இப்பழமொழிகள் பட்டையாகின்றன. கதை சொல்லும் போது இப்பழமொழிகள் கவனங்களை ஈர்க்கின்றன. இவற்றைச் சொல்லடை, முதுமொழி, பழஞ்சொல், முதுசொல் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர்.

‘‘சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்

‘‘விரலுக்குத் தகுந்த வீக்கம் வேணும்’’

ஆத்துல போட்டாலும் அளந்து போடு’’

என்பன பழமொழிக்குச் சில சான்றுகள் ஆகும்.

©TBS NOT TO BE REPUBLISHED

**விடுகதைகள்:** கிராமத்து மக்கள் சில நேரங்களில் தங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட விரும்புகின்றனர். அப்போது சில புதிர்களைப் போட்டு விடுவிக்கும்படி வேண்டுகின்றனர். இப்புதிர்களே விடுகதைகள் ஆகும். இதைப் 'பிசி' என்பார் தொல்காப்பியர். "அழிப்பான் கதை", "வெடிபோடுதல்" என்றும் கூறுவர்.

எ.கா: கழுத்துண்டு தலையில்லை; கையுண்டு விரலில்லை
உடலிருக்கு காலில்லை - அது என்ன?

(விடை : சட்டை)

**நாட்டுப்புற விளையாட்டுகள் :** விளையாட்டுகள் மனமகிழ்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் உதவுவதோடு மனிதனது பொழுதையும் போக்குகின்றன. நாட்டுப்புற விளையாட்டுகளைக் குழந்தைகள் விளையாட்டு, சிறுவர்கள் வீட்டினுள்ளே விளையாடுவது, வீட்டிற்கு வெளியே விளையாடுவது என்றும் இருவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். கிராமிய விளையாட்டுகள் இயற்கையோடு இயைவன. கண்ணாமூச்சு, பாண்டி, சொட்டாங்கல், கில்லி, பல்லாங்குழி, மெல்லப்போய் கிள்ளி வா, உறியடித்தல், தாயம் எனப் பல்வேறு விளையாட்டு வகைகள் உள்ளன. இவ்விளையாட்டுகளின் போதும் அதற்கேற்ற பாடல்களை விளையாடுபவர்கள் அழகிய சந்தங்களுடன் பாடி மகிழ்வர்.

**நம்பிக்கைகள் :** நம்பிக்கையை மனிதனின் மூன்றாவது கை என்பார்கள். கிராமப்புறத்து நம்பிக்கைகள் வலுவானவை. இந்நம்பிக்கைகள் மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்கின்றன. இவை இன்று மட்டுமல்லாது பாட்டன் வழி அப்பனுக்கும், அப்பன் வழி பிள்ளைக்கும், பிள்ளை வழி பேரனுக்கும் என்று ஆற்றொழுக்காகப் பரவி வருகிறது. எனவேதான் இந்த நம்பிக்கைகள் மரபுகளின் முத்திரைகளோடு விளங்குகின்றன. ஏன், எதற்கு, எப்படி என்பது போன்ற

© KTBS NOT TO BE REPUBLISHED

கேள்விகளும் கிளர்ச்சிகளும் இந்த நம்பிக்கை பூமியில் முளைப்பதில்லை. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவார்கள் என்று நம்புதல், எதிரில் சவ ஊர்வலம் வந்தால் நல்லது நடக்கும் என்று நம்புதல் போன்றவை நாட்டுபுற நம்பிக்கைகள் ஆகும். உணவு, உடை, குழந்தை, திருமணம், வழிபாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய நம்பிக்கைகள் பல வகைப்படும்.

***சடங்குகள் :*** குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து மக்களால் கைக்கொள்ளப்படுமானால் அவை சடங்குகள் என்று பெயர் பெறுகின்றன. சடங்குகள் வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. மனிதனுடைய பிறப்பிலும், இறப்பிலும், திருமணத்திலும், வழிபாட்டிலும் சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றன.

***நாட்டுப்புற இயலின் தேவை:*** நாட்டுப்புறவியல் பண்பாட்டின் எச்சமாகக் கருதப்படுகிறது. இத்துடன் கடந்தகால வரலாற்றையும், நிகழ்காலத் தன்மைகளையும் விளக்குகின்றது. இலக்கிய ஆய்வின் உட்பிரிவாகவும் கொள்ளப்படுகிறது. எனவே இவ்வியலால் பண்பாடு, நாகரீகம், வரலாறு, இலக்கியம் போன்ற பல்வேறு பயன்கள் கிட்டுகின்றன. இவ்வியல் நம்மிடையே இன்றும் அதிக வளர்ச்சி பெறவில்லை. ஆனால் வளர்வதற்கான கூறுகளும் - குறிப்புகளும் நிறைந்த அளவில் உள்ளன.

***ஆசிரியர் குறிப்பு:*** முனைவர் சு. சண்முக சுந்தரம் திருநெல்வேலி மாவட்டம் கால்கரை என்ற ஊரில் பிறந்தவர். நாட்டுப்புறக் கல்வியிலும் ஆய்விலும் ஈடுபட்டவர். நாட்டுப்புறவியலில் இருபது நூல்களுக்கும் மேல் இயற்றியுள்ளார். இத்துறையின் புதிய பக்கங்களைப் புரட்ட இன்றும் உழைத்து வருபவர்.

மூங்கில் இலை மேலே என்ற இவரதுநூல் நாட்டுப்புற இயல் கட்டுரைகள் அடங்கியது. இக்கட்டுரை, இந்நூலில் அமைந்துள்ள முதல் கட்டுரை ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**அருஞ்சொற் பொருள்:** கருவூலம் - பொருள் பெட்டகம், செயற்கைப் பூச்சு- ஒப்பனை, எச்சம்-எஞ்சியிருப்பது, மேனி - உடல், கலைஞர் - கலைகளில் வல்லுநர், சரமாரியாய் - தொடர்ச்சியாய், புதிர், பிசி - விடுகதை, பேறு - வாய்ப்பு.

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. நாட்டுப்புற இயல் எவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறை ஆகும்?
2. மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பரவியுள்ளவை எவை?
3. விடுகதையைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
4. நாட்டுப்புற ஆடலுக்கு இரண்டு சான்றுகள் தருக.
5. கிராமிய விளையாட்டுகளின் வகைகளைக் குறிப்பிடுக

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக**

1. மனிதன் எப்போது ஆட விரும்புகிறான்?
2. கூத்து குறித்து முனைவர். சு. சண்முக சுந்தரம் கூறுவன யாவை?
3. நாட்டுப்புறவியலின் இன்றைய தேவையினைக் குறிப்பிடுக.

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:**

1. நாட்டுப்புற இயலின் வகைகளைக் குறிப்பிடுக
2. நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து எழுதுக.
3. பழமொழி குறித்து முனைவர் சு. சண்முகசுந்தரம் கூறுவனவற்றை எழுதுக.
4. நாட்டுப்புற நம்பிக்கைகள் குறித்து விளக்குக.

@KTBS NOT TO BE REPUBLISHED

II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக:

1. ''நாட்டுப்புற இயலின் அறிவு என்பது மனித அறிவின் கிளையாகும்'' ''நாட்டுப்புற இயலின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பரவியுள்ளன''
2. ''நாட்டுபுறப் பாடல்கள் எளியவை - பகட்டில்லாதவை - தூய்மையானவை- பொய்க்கலப்பற்றவை''
3. ''குறிப்பிட்ட நிகழ்சிகள் தொடர்ந்து மக்களால் கைக்கொள்ளப்படுமானால் அவை சடங்குகள் என்று பெயர் பெறுகின்றன''

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-

1. நாட்டுப்புற இயல் என்பது ____________ நிலையாகும்.
2. ஆடலும் பாடலும் இணைந்தால் தான் ____________ வழி கிடைக்கும்.
3. சொல் வைரங்களுக்கு __________ பட்டையாகின்றன.
4. __________ மனிதனின் மூன்றாவது கை என்பார்கள்.

III அ) சேர்த்து எழுதுக

நாடகம் + ஆகும், பழக்கம் + வழக்கம், அறிவு + உரை

ஆ) பிரித்து எழுதுக

இசைப்பொலிவு, ஆயிரமாயிரம், நாட்டுப்புறவியல்

இ) எதிர்ச் சொல் தருக:-

மகிழ்ச்சி
பொய்
எளிமை

ஈ) தொடரில் அமைத்து எழுதுக:

சேமிப்பு அறை, கலைக் கருவூலங்கள், காலந்தோறும்

**செய்முறை :** மேலும் பல நாட்டுப்புறப் பாடல்கள், விளையாட்டுகள், விடுகதைகள் பழமொழிகள் ஆகியன பற்றி கேட்டறிந்து அவற்றைத் தொகுத்துத் தருக.

@KTBS NOT TO BE REPUBLISHED

# இலக்கணம்

## 1. எழுத்து

மொழி மக்களால் படைக்கப்பட்ட ஓர் அரிய கலை. மொழி பிறருக்குத் தன் கருத்தை உணர்த்தவும், செய்தியைப் பிறருக்கு எடுத்துக் கூறவும் உதவுகிறது. மொழிக்கு அடிப்படை எழுத்துக்கள் ஆகும்.

காலத்தால் பழமையானதும், சிறப்பால் உயர்வானதும் ஆகிய செம்மொழித் தகுதி பெற்ற நம் தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் மொத்தம் 247. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| உயிர் எழுத்துக்கள் | 12 |
| மெய் எழுத்துக்கள் | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| மொத்தம் | 247 |

NOT TO BE REPUBLISHED @KTBS

***அ) உயிரெழுத்துக்கள்:-*** வேறு ஒலிகளின் துணை இல்லாமல், தனித்து ஒலிக்க முடிகின்ற எழுத்தை, உயிரெழுத்து என்று கூறுவர்.

***அவை:-*** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

***மாத்திரை:-*** எழுத்துக்கள் உச்சரிக்கப்படும் அளவை மாத்திரை என்பர்.

***குறில்:-*** உயிரெழுத்துக்களில் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துக்கள் குறிலெழுத்துக்களாகும். இவை ஒரு மாத்திரை அளவில் உச்சரிக்கப் படுகின்றன.

**நெடில்:-** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துக்களும் இரண்டு மாத்திரை அளவு உச்சரிக்கப்படுவதால் இவை ஏழும் நெடில் எழுத்துக்கள் எனப்படும்.

**ஆ) மெய்யெழுத்துக்கள்:-** உயிர் எழுத்துக்கள் போலல்லாமல், பிற உயிர் எழுத்துக்களின் துணை கொண்டு இயங்கும் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

**அவை:-** க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

இவ்வெழுத்துக்களை ஒலிக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவ்வெழுத்துக்கள் அனைத்தும் 1/2 மாத்திரை அளவு உச்சரிக்கப்படும்.

**வல்லினம்:** - மெய்யெழுத்துக்களில் க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறு எழுத்துக்களும் வன்மையாக உச்சரிக்கப்படுவதால் இவற்றை வல்லினம் என்பர்.

**மெல்லினம்:-** மெய்யெழுத்துக்களில் ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறு எழுத்துக்களும் மென்மையாக உச்சரிக்கப்படுவதால் இவற்றை மெல்லினம் என்பர்.

**இடையினம்:-** மெய்யெழுத்துக்களில் உள்ள ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய ஆறு எழுத்துக்களும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட முறையில் உச்சரிக்கப் படுவதால் இவற்றை இடையினம் என்பர்.

**(இ) உயிர்மெய்யெழுத்துக்கள்:** - ஒவ்வொரு உயிர் எழுத்தும், எல்லா மெய்யெழுத்துக்களோடும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்கள் ஆகும்.

எ-டு: க் + அ = க

க் + ஆ = கா

இவைமொத்தம் (12 X 18) 216 ஆகும்.

© KTBS
NOT TO BE REPUBLISHED

**ஈ) ஆய்த எழுத்து:-** தமிழில் உள்ள ஃ என்ற எழுத்தை ஆய்த எழுத்து என்பர். இதை முப்பாற் புள்ளி எனவும் கூறுவர்.

இவ்வெழுத்துக்கள் எல்லாம் தமிழ்மொழியின் வளத்தை மேம்படுத்தி வருகிறது. இவற்றின் விளக்கங்களை நன்கு அறிந்து சரியான முறையில் உச்சரிக்கப் பழகவேண்டும்.

'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதற்கேற்பத் தெளிவாக உச்சரிக்கப் பழகினால் தான் பிறரை ஈர்க்கும் வகையிலும், திறமையாகவும் பேசமுடியும். இதனை உணர்ந்து இலக்கணத்தை நன்கு அறிதல் வேண்டும்.

**சார்பெழுத்துக்கள்:-** தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் முதல் எழுத்துக்கள் என்பர். இவை அல்லாமல், உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் சார்ந்து பிறக்கும் எழுத்துக்களைச் சார்பெழுத்துக்கள் என்பர்.

அவையாவன:-

1. உயிர்மெய்யெழுத்து
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6. குற்றியலிகரம்
7. ஐகாரக் குறுக்கம்
8. ஔகாரக் குறுக்கம்
9. மகரக் குறுக்கம்
10. ஆய்தக் குறுக்கம்

NOT TO BE REPUBLISHED @KTBS

**வினாக்கள்:-**

1. தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?
2. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. உயிர் எழுத்துக்கள் என்றால் என்ன? அவை யாவை?
4. உயிர் எழுத்தின் வகைகளை எழுதுக?
5. மெய்யெழுத்துக்கள் என்றால் என்ன? அவை யாவை?
6. மெய்யெழுத்தின் வகைகளை எழுதுக?
7. உயிர்மெய் எழுத்துக்கள் என்றால் என்ன? அவை எத்தனை?
8. மாத்திரை என்றால் என்ன?
9. குறில், நெடில் என்றால் என்ன? விளக்குக?
10. முதல் எழுத்துக்கள் என்றால் என்ன?
11. சார்பெழுத்துக்கள் என்றால் என்ன? விளக்குக?
12. சார்பெழுத்துக்கள் எத்தனை? அவையாவை?

**செய்முறை :**

தமிழ் எழுத்துக்கள் குறித்து ஆற்றொழுக்கு வரைபடம் (flow chart) ஒன்று தயார்செய்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 2. சொல்

எழுத்து தனித்தோ, ஒன்றுக்கு மேற்பட்டோ இணைந்து, ஒரு குறிப்பிட்ட பொருளைத் தருவது சொல் எனப்படும்.

(எ.டு) ஆ (பசு), ஈ, பூ, கை - ஓரெழுத்துக் சொற்கள்

மாடு, ஆடு, வான் - ஈரெழுத்துச் சொற்கள்

வானம், காற்று - மூன்றெழுத்துச் சொற்கள்

மனிதன், ஆகாயம் - நான்கெழுத்துச் சொற்கள்

இவ்வாறு எழுத்துக்களால் சொற்கள் பிறக்கின்றன. இவ்வாறான சொற்களைப் பதம் என்பர். சொற்கள் பிரிக்கப்படும் வகையில் அமைந்தால் அவற்றைப் பகுபதம் என்பர்; பிரிக்கமுடியாத நிலையில் இருந்தால் பகாப்பதம் என்றும் கூறுவர்.

(எ.டு) பாடு, காடு, மனிதன் - பகாப்பதம்.

பாடினான், ஓடினான், சென்றான் - பகுபதம்

பகுபதத்தின் உறுப்புகள் ஆறு ஆகும். அவை, பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவை ஆகும்.

**சொற்களின் வகைகள்:-** எழுத்துக்களால் உருவாக் கப்படும் சொற்கள். 1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல் என நான்கு வகைப்படும். ஒரு பொருளின் பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்.

(எ.டு) : மனிதன், மரம், கல், ஆறு, கடல்.

இது இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என இரண்டு வகைப்படும். எந்தக் காரணமும் இல்லாமல், இந்தப்பொருளுக்கு இதுதான் பெயர் என்று நம்முடைய முன்னோர்களால் பெயரிடப் பட்டு வழங்கி வருவதால் இடுகுறிப் பெயர் எனப்பட்டது.

(எ.டு) : மரம், கல், மலை, நிலவு, சூரியன்

இவ்வாறு இல்லாமல் ஏதாவது ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்குவது காரணப் பெயர் எனப்படும்.

(எ.டு) : நாற்காலி, பறவை.

இவ்வாறான பெயர்ச் சொற்கள், பொருள், இடம், காலம்,

© TRB NOT TO BE REPUBLISHED

சினை (உறுப்பு), குணம் (பண்பு), தொழில் என்ற ஆறன் அடிப்படையில் தோன்றும். ஆகவே பெயர்ச் சொல் ஆறு வகைப்படும்.

(எ-டு) மனிதன், மயில், புத்தகம் - பொருட்பெயர்
திருச்சி, சென்னை, மைசூர் - இடப்பெயர்
மணி, நாள், ஆண்டு - காலப்பெயர்
கை, கால், தலை, கண் - சினைப்பெயர்
வெண்மை, கருமை, நீலம் - பண்புப்பெயர்
படித்தல், சிரித்தல், ஆடுதல் - தொழிற்பெயர்

## 3. திணை

நம் முன்னோர்கள் உலகில் உள்ள உயிர்உள்ள பொருட்களையும், உயிரற்ற பொருட்களையும் உயர்திணை எனவும், அஃறிணை எனவும் இரண்டாகப் பகுத்துள்ளனர்.

**உயர்திணை :** - அறிவு, பண்பு ஆகியவற்றால் உயர்ந்த உயிர்களை உயர்திணை என்பர்.

(எ-டு) மக்கள், தேவர், நரகர்

**அஃறிணை:-** அறிவு, பண்பு ஆகியவற்றால் உயர்ந்த மக்கள், தேவர், நரகரை விடுத்து எஞ்சியுள்ள உயிருள்ள பொருள்களும், உயிரற்ற பொருட்களும் அஃறிணை எனப்படும்.

(எ.டு) ஆடு, மாடு, யானை - உயிருள்ளவை
ஆறு, மலை, காடு - உயிரற்றவை

## 4. பால்

உலகில் உள்ள அனைத்துப் பொருட்களையும் ஐந்து பகுப்புகளாகப் (பால்) பிரிக்கின்றனர். அவை, ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின் பால் எனப்படும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

மன்னன், கண்ணன் - ஆண்பால்

அரசி, இராதை - பெண்பால்

மக்கள் - பலர்பால்

மாடு, ஆடு - ஒன்றன்பால்

பசுக்கள், மாடுகள் - பலவின்பால்

## 5. எண்

பொருட்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். ஒன்றைக் குறிப்பது ஒருமை எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிப்பது பன்மை எனப்படும்.

(எ.டு) :- மான், அரசன் } ஒருமை

பறவைகள், மக்கள் } பன்மை

@KTBS NOT TO BE REPUBLISHED

# NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED